பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 30 ஞாயிற்றுக்கிழமை 15.09.2024 கதிர் 312

## இனி இது இரகசியம் அல்ல!

ஜனாதிபதி வேட்பாளர் அரியநேத்திரனை ஆதரித்து அவரது சங்குச் சின்னத்திற்கு வாக்களிக்கும்படிகேட்டுயாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகம் ☞2

## பரப்புரையில் சிறுவர்கள்; விசாரணை தொடங்கியது

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அரசியல் பரப்புரைகளில் பல்வேறு அரசியல் கட்சிகளும் சிறுவர்களை ஈடுபடுத்துவது குறித்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பாக ஏற்கனவே விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் பெரியவர்களின் உதவி, தலையீடு அல்லது வற்புறுத்தலுடன் இந்தத் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளில் சிறுவர்கள் பங்கேற்பதால் விபத்துக்கள் அல்லது உடல் மற்றும் மன உளைச்சல்களுக்கு ☞8



## தேசிய மக்கள் சக்தியின்
# இடைக்கால அமைச்சரவையில் தமிழர்களுக்கும் இடம் உண்டு
### கட்சி உறுப்பினர் சமரசிங்க தெரிவிப்பு

தேசியமக்கள்சக்தியின்இடைக்கால அமைச்சரவையில் வடக்குகிழக்கு மலையகத்தை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெற்றிருப்பார்கள் என கட்சியின் நிறைவேற்று குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க ☞8

## ஐ.நா. தீர்மானத்தில் கால நீடிப்பு
# அனுசரணை நாடுகள் செப். 19 கூடி ஆராய்வு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான 51/1 தீர்மானத்தின் கால நீடிப்புக் குறித்து தீர்மானத்திற்கு இணை அனு ☞8

# செல்வந்தர்களுக்கு அதிக வரி வறியோரின் நிலை மேம்பாடு
### இதற்காக நாணய நிதித்துடன் பேசுவேன் என்கிறார் சஜித்

தான் ஆட்சிக்கு வந்தால், செல்வந்தர்கள் அதிக வரி செலுத்துவதையும், வறியவர்கள் தங்கள் நிலைமைகள் மேம்படுவதையும் உறுதிசெய்யும் வகையில், ☞8

# அரசின் வரிச் சீர்திருத்தம் எமது யோசனையேதான்
### ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. மரிக்கார் சுட்டிக்காட்டு

ஆளும்தரப்பு அடுத்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப் போவதாக அறிவித்துள்ள வரிச் சீர்திருத்த நடவடிக்கைகள் ஐக்கிய மக்கள் சக்தி முன்வைத்த யோசனைகளுக்கு ☞9

# காலம் தாழ்ந்துவிட்டது; இனி வெற்றியைத் தடுக்க முடியாது
## அனுராதபுரத்தில் அநுர வெற்றி முழக்கம்





இந்தச்சந்தர்ப்பத்தில்எனக்குரணிலுக்கும், சஜித்துக்கும்ஒருசெய்தியைச்சொல்லவேண்டியுள்ளது. உங்களுடைய திட்டங்களும் முன்னெடுக்கவுள்ள செயற்பாடுகளும் காலம்தாழ்ந்துவிட்டது. தேசிய மக்கள் சக்தியின்வெற்றியைஇனிமேல்நிறுத்திவிடவே முடியாது என்று தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார ☞2

# ரணிலுக்கு இன்னொரு சந்தர்ப்பம் கொடுங்கள்
### இறைஞ்சிய அமைச்சர் டக்ளஸ்

மறைபொறுமானத்தில்கிடந்தநாட்டின் பொருளாதாரத்தை கடந்த இரண்டு வருடங்களில் தனது ஆற்றல்மிக்க தலைமைத்துவத்தினூடாக தூக்கி நிறுத்தியிருக்கின்றார். இவ்வாறான நிலையில்அந்தமுயற்சிகளைதொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல அவருக்கு மேலும் ஒரு சந்தர்ப்பத்தை நாட்டு மக்கள் ஒன்றிணைந்து வழங்க வேண்டும் என கோருகின்றேன் என்று அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா தெரிவித்தார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஏற்பாட்டில் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவு தெரிவித்து யாழ்ப்பாணத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் நாவாந்துறை சென் மேரிஸ் பிளையாட்டு மைதானத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. அங்கு உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

எமதுமக்களின்அரசியல், அபிவிருத்தி, அன்றாடப் பிரச்சினைகளுக்குதீர்வைத் தரக்கூடிய ஒரு தலைவராக ரணில் விக்ரமசிங்கவே இருந்துவருகின்றனர் இதேநேரம் தேசிய நல்லிணக்கவழிமுறையூடாக நடைமுறைச் சாத்தியமான தீர்வை எவ்வாறு பெற்றுக் கொள்ளவேண்டும்என்பதை நாமேதீர்மானிக்கவேண்டும்.

தமிழ் மக்களுக் ☞8



# காஸ் சிலிண்டரை கைவிட்டால் யாழிற்கு அபிவிருத்தி இல்லை
### ரணில் நேற்று எச்சரிக்கை

எமது திட்டங்களினால்தான் யாழ்ப்பாணத்தை முன்னேற்ற முடியும். இங்கு பாரிய மாகாண சபைக் கட்டடமொன்று உள்ளது. இந்தக் கட்டடம் போதுமானதல்ல. அதனை பலப்படுத்த நாம் நிதி ஒதுக்குவோம். யாழ்ப்பாணத்துக்கு பலம் வாய்ந்த பொருளாதாரம் அவசியம். காஸ் சிலிண்டருக்கு வாக்களியுங்கள். தவறினாலும் கேசும் இல்லை. ☞9

# ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததும் அரியத்தார் யாரோ நாம் யாரோ
### நெல்லியடியில் நேற்று விக்னேஸ்வரன் தெரிவிப்பு

ஜனாதிபதித் தேர்தல் முடிந்தால் அதில் போட்டியிடும் வேட்பாளர் அரியநேத்திரன் யாரோ நாம் யாரோ என்று தெரிவித்தார் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர், நாடாளுமன்றஉறுப்பினர்விக்னேஸ்வரன்.

வேட்பாளர் அரியநேத்திரனை ஆதரித்து நேற்று நடந்த கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தெரிவித்ததாவது:

வாக்களிப்பதற்கு இன்னும் 6 நாட்களே உண்டு. அனைவரும் தவறாமல் சங்கு சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும். ☞8

## அம்பாறை தமிழ் மக்களின்
# இருண்ட யுகத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கவே ரணிலுக்கு ஆதரவு
### முன்னாள் எம்.பி. சந்திரகாந்தன் அறிவிப்பு

அம்பாறை மாவட்டத்து தமிழ் மக்கள் இன்றுவரை தமது அடிப்படைபிரச்சினைகளைக்கூடத் தீர்க்க முடியாது வாழும் சூழலில் எமது மக்களின் இருண்ட யுகத்துக்குமுற்றுப்புள்ளிவைக்கும் முகமாகவே ஜனாதிபதிவேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு அளிக்கும் தீர்மானத்தை எடுத்தேன் என்று தமிழ் அரசுக் கட்சியின்முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தன் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில்ஜனாதிபதிரணில் ☞9

## இனி இது .....

என்ற பெயரில் நேற்றொரு அறிக்கை வெளியாகி இருந்தது. வலைத்தளங்கள் சிலவற்றிலும் அது செய்தியாக வெளியாகி இருந்தது. தமிழ் மக்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகத்தின் திறந்த மடல் என்ற மகுட வாக்கியத்துடன் தமிழின எழுச்சியின் தடைகள் உடைத்து தமிழர் தேசமாய் அணிதிரள்வோம் என்ற தலைப்பில் அந்த அறிக்கை வடிவமைக்கப்பட்டிருந்தது. கடைசியில் "உரிமைகளுடன் கோரி நிற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகம்" என்று போடப்பட்டிருந்தது.

எனக்குத் தெரிந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாணவர் ஒன்றியம் இருக்கின்றது. ஆசிரியர் சங்கம் இருக்கின்றது. கல்விசாரா ஊழியர் சங்கம் இருக்கின்றது. கட்சி சார்ந்த ஒருசில தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. புலிகள் இருந்த காலத்தில் மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் என்றொரு அமைப்புக்கூட அறிக்கைகள் விட்டுக்கொண்டிருந்தது. ஆசிரியர் சங்கத்திற்குள் ஏதாவது பிளவு என்றால் மற்றொரு சங்கத்தின் பெயரில்கூட அறிக்கைகள் கடந்த காலங்களில் வந்திருக்கின்றது. ஆனால், பல்கலைக்கழகச் சமூகம் என்ற பெயரில் இது என்ன புதுச் சங்கம் என்று ஆச்சரியப்பட்டேன்.

ஒருவேளை, தனித்தனியே அறிக்கைவிட்டு எதற்குச் சிக்கல் என்று எல்லாச் சங்கங்களும் ஒன்றிணைந்து இந்த அறிக்கையை விட்டுள்ளனவோ என்றொரு சந்தேகத்தில் தேடிப்பார்த்தால் அறிக்கையில் எந்தவொரு சங்கத்தின் பெயரும் இல்லை. அதன் தலைவர்களது கையெழுத்தும் இல்லை. சரி எதற்கும் விசாரித்துப் பார்க்கலாம் என்று உள்ளே போனால், சில சங்கங்களுக்கு இப்படியொரு அறிக்கை வரப்போகின்றது என்பதே தெரிந்திருக்கவில்லை. மற்றைய சங்கங்களுக்கு இப்படியொரு அறிக்கையை வெளியிடுவதில் எந்தவித கருத்தொற்றுமையும் இருக்கவில்லை என்பதால் அவை தம்மை அதில் சம்பந்தப்படுத்திக்கொள்ள மறுத்துவிட்டன.

வேட்பாளர் அரியநேத்திரனை தேர்தலில் நிறுத்தியிருக்கும் தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பின் தலைமைப் பொறுப்பில் உள்ள 14 பேரில் ஒருவரான பேராசிரியர் கணேசலிங்கம் மற்றும் பீடத் தலைவர் ஒருவர் தவிர இந்த விடயத்தில் தலையால் குத்திமுறிய ஒருவரும் தயாராக இருக்கவில்லை என்றும் சொல்லப்பட்டது. அதுவும்போக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொன்விழாக் கொண்டாட்டத்திற்கு அடுத்த ஜனாதிபதியையே முதன்மை விருந்தினராக அழைப்பது என்று பல்கலைக்கழகப் பேரவை ஏற்கனவே முடிவு செய்திருக்கும் நிலையில் யாராவது ஒரு வேட்பாளருக்கு ஆதரவு தெரிவிக்கப்போய் எதற்கு வரும் ஜனாதிபதியின் கோபத்திற்கு ஆளாகவேண்டும் என்கிற உணர்வும் எச்சரிக்கையும்கூட அரியத்தாருக்கு ஆதரவு என்கிற வழிக்குப் பலரையும் இழுக்கமுடியாமல் போனமைக்குக் காரணம் என்கிறார்கள்.

சரி! ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் அரசிடம் சம்பளம் வாங்குபவர்கள் அதனால் அவர்கள் நல்லது கெட்டதுகளைப் பற்றியும் தமது எதிர்காலம் பற்றியும் சிந்திப்பதில் ஒரு நியாயம் இருக்கின்றது. ஆனால் மாணவர் ஒன்றியத்திற்கு என்ன வந்தது என்று ஆராய்ந்தால். அங்கே அநுர உட்பட எல்லாத் தரப்புக்களுக்கும் ஆதரவானவர்கள் உள்ளதால் ஒருமித்த கருத்து எதனையும் எடுக்கமுடியவில்லையாம். ஆகமொத்தத்தில் பல்கலைக்கழகத்தின் எந்த அமைப்பும் தனது பெயரில் அரியத்தாருக்கு ஆதரவளித்து அறிக்கை வெளியிட முடியாத உள்வீட்டு நிலையால் இப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகம் என்கிற அநாமதேய அறிக்கை வந்திருக்கின்றது.

அப்படி ஒரு அறிக்கையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகம் என்ற அமைப்பு விடுவதில் தவறில்லை. ஆனால், அந்தப் பல்கலைக்கழகச் சமூகம் என்பவர்கள் யார் யார் என்பதை வெளிப்படுத்தி, தம்மை அடையாளப்படுத்தியிருந்தால் அதிலொரு நியாயம் இருக்கின்றது. அதைவிடுத்து ஏதோ ஒட்டுமொத்த பல்கலைக்கழகமும் சேர்ந்து எடுத்த முடிவு மாதிரி மக்களை ஏமாற்ற முயன்றிருப்பது ஏற்புடையதே அல்ல. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகம் என்று தம்மை அடையாளப்படுத்திக்கொள்ளும் தனிநபர்களான தாம் யார் என்பதையே வெளிப்படுத்த முடியாதவர்கள் எப்படி மற்றவர்களை வழிநடத்த முடியும்?

போர்க் காலங்களில் உயிர் அச்சுறுத்தல் காரணமாக இதுபோன்ற பல அநாமதேய துண்டறிக்கைகளும் அறிக்கைகளும் வெளியிடப்பட்டன. அப்போது அது தேவையாக இருந்தது. அத்தகைய அறிக்கைகளின் பின்னால் யார் இருக்கிறார்கள் என்பது ஊடகங்கர்களுக்கும் தெரிந்திருந்தது. ஆனால், இன்று சூழல் அப்படியில்லை. தேர்தலில் யாரையும் யார் வேண்டுமானாலும் பகிரங்கமாக ஆதரிக்கக்கூடிய நிலைதான் இருக்கின்றது. அப்படியிருந்தும் அநாமதேய அறிக்கை வெளியிடுகின்றார்கள் என்றால் பல்கலைக்கழகத்திற்கு உள்ளேயே அரியத்தாருக்கு ஆதரவு எப்படியிருக்கின்றது என்பது தெரிகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்பது தமிழ்ச் சமூகத்தின் கண்ணாடி என்று நீண்டகாலமாகக் கூறிவந்திருக்கிறார்கள் என்று எனக்கொரு ஞாபகம்.

............................

தேர்தல் பரப்புரை முடிய இன்றோடு சேர்த்து 4 நாள்கள் மட்டும்தான் இருக்கின்றன. வேட்பாளர் பம்பரமாகச் சுழன்று பரப்புரைகளில் ஈடுபடுகின்றார்கள். அவர்கள் பெரும் எண்ணிக்கையில் கூடும் கூட்டங்களில் அடுத்தடுத்து ஓடி ஓடிப் பேசுகின்றார்கள். அரியநேத்திரனைத் தவிர. அரியத்தாருக்கு ஆதரவாக ஆங்காங்கே சில பல சின்னச் சின்ன சந்திப்புக்கள் நடக்கின்றன. அல்லது சிறிய கூட்டங்கள் நடக்கின்றன. பணம் கொடுத்து ஆட்களை இறக்கிவிட்டு வீடுவீடாகச் சென்று துண்டறிக்கைகள் கொடுக்க வைக்கிறார்கள். அதுபோக அரியத்தாருக்கு வாக்களிக்காவிட்டால் நீங்கள் எல்லாம் சிங்களவனுக்குப் பிறந்தவர்கள் என்று உசுப்பிவிட்டு காணொலிகளைப் பதிவுசெய்து சமூக ஊடகங்களில் பரப்புகிறார்கள். நண்பர் ஒருவர் கேட்டார், கடந்த 15 வருடங்களாக இவர்கள் எல்லோரும் சிங்களவனுக்குப் பிறந்திருந்துவிட்டு இந்த வருசம்தான் திரும்பத் தமிழனுக்குப் பிறந்தவையோ எண்டு! அதுவும் சரியான கேள்வியாகத்தான்படுகிறது.

அதேநேரம் அரியத்தாரின் அரசியல் வாழ்க்கையை அழித்து அவரை ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்கிவிட்ட 7 கட்சிகளும் அவருக்காக களத்தில் இறங்கி வேலை செய்கின்றனவா என்று கேட்டால் இல்லை என்று கூசாமல் பதில் சொல்கிறார்கள். ஈபிஆர்எல்எவ், தமிழ் மக்கள் கூட்டணி தவிர்ந்து களத்தில் இறங்கி வேலை பார்ப்பவர்களுக்குக் கடும் பஞ்சம்தானாம். சிலர், கூட்டங்களை ஏற்பாடு செய்தால் அதில் பேசமட்டும் வருகிறார்களாம். அது தவிர வேறு எதுவும் செய்வதில்லையாம். அரியத்தாரை களமிறக்கிய பொதுக்கட்டமைப்புக்குள் இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கட்சிகள் என்றால் ரெலோவும், புளொட்டுந்தான். அதிலும் ரெலோவுக்குத்தான் பெரியளவில் என்றில்லாவிட்டாலும் வடக்கு கிழக்கில் ஒரு கட்சிக் கட்டுமானம் உண்டு. அடுத்தது புளொட்.

ரெலோவின் மன்னார் மாவட்டக் கிளை அரியத்தாருக்காக இறங்கி எந்தவொரு வேலையும் செய்யவில்லை என்று கட்சிக்காரர்களே குற்றஞ்சாட்டுகிறார்கள். வவுனியாவில் ஒரு பகுதி மட்டும் வேலை செய்கிறதாம். யாழ்ப்பாணத்திலும் விந்தனுடன் சேர்ந்த கொஞ்சப்பேர் வேலை செய்கிறார்களாம். மட்டக்களப்பிலும் அசுமாத்தம் ஏதும் இல்லையாம். திருகோணமலையில் சிறு அசுமாத்தம் உண்டாம். அம்பாறையில் ஹென்றி மகேந்திரன் தலைமையில் களத்தில் இறங்கிநிற்கிறார்களாம். புளொட்டில் இரண்டாம் நிலைத்தலைவரான கஜதீபன்தான் அனேகமாக எல்லாக் கூ-ட்டங்களுக்கும் செல்கிறார். ஆமை ஓட்டுக்குள் தலையை இழுத்துக்கொள்வது போன்று, தேர்தல் நெருங்க நெருங்க சித்தரை பரப்புரை மேடைகளில் காணமுடியவில்லை என்று குறைப்படுகிறார்கள். இருந்தாலும் முல்லைத்தீவு மாவட்டம் தவிர மற்றைய இடங்களில் புளொட் தன்னாலான வேலையைச் செய்கிறதாம்.

சுரேஸ் பிரேமச்சந்திரன்தான் முழு வீச்சில் அரியத்தாரை தூக்கிச் சுமக்கிறார் என்கிறார்கள். அவர் கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் விக்னேஸ்வரனைத் தூக்கிச் சுமந்தவர் என்பதால் அவருக்கு இது பழக்கப்பட்டதாக இருக்கக்கூடும். ஈபிஆர்எல்எவ்தான் ஒப்பீட்டளவில் பெரிய கூட்டத்தை அரியத்தாருக்காக வடக்கில் நடத்தியிருந்தது. சுரேஸ் தவறாமல் எல்லாப் பரப்புரைக் கூட்டங்களுக்கும் செல்கிறார். தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் பெரும்பாலும் மணிவண்ணனை அனுப்பி வைக்கிறார் விக்னேஸ்வரன்.

மறுபக்கத்தில் தமிழ் அரசுக் கட்சி சஜித்துக்கு ஆதரவு என்று அறிவித்ததோடு சரி. அவருக்கு ஆதரவாகப் பெரிய கூட்டங்கள் எதனையும் நடத்தவில்லை. கண்டியில் மாவையரின் மகனுடன் போய் சஜித்தைச் சந்தித்துவிட்டுத் திரும்பிய புலம்பெயர் வர்த்தகரான அகிலன் மட்டும் சஜித்துக்கு ஆதரவாக சாவகச்சேரியில் ஒரு கூட்டத்தை நடத்தியிருந்தார். ஆனால், தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் வேட்பாளர்கள் கிராமங்களில் இறங்கி வேலை செய்கிறார்கள் என்று சொல்லப்படுகின்றது. சத்தம் சந்தடியின்றி களத்தில் குதித்திருக்கும் அவர்கள் கள நிலைமைகள் சாதகமாகத்தான் இருக்கின்றன என்று தலைவர்களுக்குத் தகவல் தந்துள்ளார்களாம். யாழ்ப்பாணம், கிளிநொச்சியின் சில பகுதிகள், முல்லைத்தீவு, மன்னாரின் ஒரு பகுதி, மட்டக்களப்பு முழுமையாக என்று களவேலை தீவிரமடைந்திருக்கின்றதாம். திருகோணமலையும் அம்பாறையும் அங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் பின்னடிப்புக்காரணமாக இன்னும் களம் சூடுபிடிக்கவில்லை என்கிறார்கள்.

சின்ன ஜமீனின் கோட்டையான கிளிநொச்சிக்குள்ளேயே ஊடறுப்புத் தாக்குதல் பாணியில் ஆங்காங்கே 'பொக்ஸ்' அடித்து பணிகள் நடக்கின்றன என்றும் கேள்வி. கோபப்பட்டு சின்ன ஜமீன் என்ன செய்யப்போகிறார் என்பது அடுத்துவரும் நாள்களில் தெரியும். பெரிய பரப்புரைக் கூட்டங்களைவிட மக்களிடம் நேரில் சென்று அரசியல்வாதிகள் பேசுவது பயன்தரும் என்பதும் அடுத்தடுத்து மாகாண சபைத் தேர்தல், உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்பன வர இருப்பதால் அதற்கு முன்னோடியாகவும் மக்களைச் சந்திப்பது நல்லது என்பதும் கட்சி மேலிடத்தால் அறிவுறுத்தப்பட்டிருக்கும் நிலையில் தமிழ் அரசுக் கட்சியினர் அமைதியாகக் காரியமாற்றி வருகின்றார்கள்.

மற்றொருபுறத்தில் ரணிலுக்கு ஆதரவாக நேற்று யாழ்ப்பாணத்தில் ஒரு பெரும் கூட்டம் நடந்திருக்கிறது. மீன்பிடித்துறை அமைச்சராக இருக்கும் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் கரையோரப்பகுதி மக்களை பெரும் எண்ணிக்கையில் திரட்டி இந்தக் கூட்டம் நடத்தப்பட்டிருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் இதுவரை நடந்த பரப்புரைக்கூட்டங்களிலேயே ஆட்கள் அதிகளவில் திரட்டப்பட்ட கூட்டம் இது. பணம் கொடுத்தும், அட்டைப் பண்ணை போட்டவர்களைக் கட்டாயப்படுத்தியும் கூட்டத்திற்கு ஆட்கள் வரவழைக்கப்பட்டார்கள் என்கிற குற்றச்சாட்டுக்கள் உண்டு என்றாலும் கூட்டத்தில் பல தலைகள் இருந்ததை மறுக்கமுடியாது. பொதுக் கட்டமைப்பை இயக்கும் புலம்பெயர் தமிழர்களிடம் இருந்து பெருந்தொகைப் பணம் வந்தாலும் அரியத்தாருக்கு ஆதரவாக இவ்வளவு பேரை நேற்றுவரை திரட்டி ஒரு கூட்டத்தை நடத்தமுடியவில்லை என்பதையும் கவனத்தில்கொள்ளவேண்டும்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## காலம்....

## (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திசாநாயக்க தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் வெற்றி நாட்டுக்கு - நாடு அநுரவிற்கு எனும் தொனிப்பொருளில் நேற்று நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் வரலாற்று வெற்றியை தேசிய மக்கள் சக்திக்கு வழங்கவுள்ளீர்கள் என்பது மிகத்தெளிவாகத் தெரிகிறது. இலங்கை வரலாற்றில் மக்கள் தேர்தல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் சந்தர்ப்பமாக இது மாறியுள்ளது.

கடந்த காலங்களில் உணவுப் பொதிக்காவும், பணத்துக்காகவும் தேர்தல் பரப்புரைக் கூட்டத்துக்குச் சென்ற மக்கள் தற்போது மாற்றத்துக்காக கூட்டத்துக்கு திரண்டு வருகின்றார்கள். அந்த மாற்றத்தை வழங்குவதற்கு திசைகாட்டி தயாராகிவிட்டது.

ரணில் விக்கிரமசிங்கவும், சஜித்பிரேமதாசவும் தற்போதைய நிலைமையை நன்கு உணர்ந்து கொண்டுள்ளார்கள். எவ்வாறாவது எமது பரப்புரைச் செயற்பாடுகளை நிறுத்துவதற்குத் திட்டங்களைத் தீட்டிய வண்ணமுள்ளார்கள்.

அதற்காக அடுத்த வாரத்தில் பொய்ப் பரப்புரைகள், முரண்பாடுகள், வன்முறைகளைத் தோற்றுவிக்கும் செயற்பாடுகள் வெகுவாக முன்னெடுக்கப்படுவற்கு முயற்சிக்கள் எடுக்கப்படுகின்றன.

அதுமட்டுமன்றி இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக வடக்கு, கிழக்கு, தெற்கு உள்ளிட்ட அனைத்து மக்களினதும் நம்பிக்கையை வென்றெடுத்த ஆட்சி ஒன்று தேசிய மக்கள் சக்தி தலைமையில் உருவாக்கப்படவுள்ளது.

ராஜபக்சக்களும், ரணில் விக்கிரமசிங்கவும் வடக்கையும், கிழக்கையும் காண்பித்து தெற்கில் வாக்குவங்கியை நிரப்பினார்கள். இனவாதத்தையும், மதவாதத்தினையும் முன்னிலைப்படுத்தினார்கள். முஸ்லிம்களால், தமிழர்களால் தேசியத்துக்கு பாதிப்பு என்று கூறி வாக்குப் பெற்றார்கள்.

இடதுசாரத்துவ பயணத்தில் 60 ஆண்டுகளாக வாக்குகளைப் பெறுவதற்கு பயன்படுத்திய உத்தியையே தற்போது சஜித் பிரேமதாச பயன்படுத்துகின்றார்.

அவர், நாம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றவுடன் ஒன்பதாம் திருத்தம் நீக்கப்படும் என்றும், தேசியக்கொடி மாற்றப்படும் என்று பரப்புரை செய்கின்றார். உண்மையில் அவர் பாவம். அவருக்கு புதிய கருப்பொருட்கள் பரப்புரைக்குத் தேவையாக உள்ளன. அவற்றைக் கண்டறியுமாறு நான் கோருகின்றேன்.

பிரித்தானியர்கள் பிரித்தாண்டார்கள். அவர்களிடமிருந்து நாட்டை மீட்பதற்காக ஒன்றிணைந்த தலைவர்கள் அதிகாரத்தைப்பெற்றுக்கொண்டதும் தங்களது அரசியல் நோக்கத்துக்காக மக்களை இனரீதியாக பிரித்தாள முயன்றார்கள்.

1949இல் பிராஜாவுரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. மலையகமக்கள் நடற்றவர்களாக ஆக்கப்பட்டார்கள். அதனைத் தொடர்ந்து தமிழர்களுக்கென பெடரல் கட்சி உருவாக்கப்பட்டது. பின்னர் சிங்கள மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதன் பின்னர் மொழிப் பிரச்சினை உருவானது. தொடர்ந்து சிங்கள, தமிழ், முஸ்லிம் கலவரங்கள் தோன்றின.

இதனால் 1977இல் வட்டுக்கோட்டையில் தீர்மானம் எடுக்கப்பட்டு வடக்கு, கிழக்கு இளைஞர்கள் தனிநாடு கோரி ஆயுதங்களைத் தூக்கினார்கள். 1978இல் பயங்கரவாத தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டு அடக்குமுறை ஆரம்பிக்கப்பட்டது. 1981இல் ஜே.ஆர்., லலித், காமினி, ரணில் உள்ளிட்டவர்கள் யாழ்ப்பாணத்தக்குச் சென்று யாழ். நூலகத்துக்கு தீயிட்டார்கள். 1983இல் கறுப்பு ஜூலை கலவரத்தை மேற்கொண்டார்கள்.

இவ்வாறான பிரிவினைவாதச் செயற்பாடுகளால் பிரபாகரன் தற்கொலை குண்டுதாரிகளை உருவாக்கினார். அதுமட்டுமன்றி பின்னர் அந்தப்போராட்டம் சிவில் யுத்தமாக மாறியது. அது 2009வரையில் நீடித்தது. அதன்பின்னர் சிறிது காலம் அமைதியாக இருந்தாலும் 2015இல் மலட்டுத்தன்மையாக்கும் ஆடைகள், கொத்துரொட்டி, வைத்தியர்கள் இருப்பதாககூறி முஸ்லிம்களுக்கு எதிராக செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. உயர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இன்னும் பிரிவினையை உருவாக்க முயன்றன. ஆனால் தொடர்ந்தும் அவ்விதமாக பயணிக்க முடியாது.

நாங்கள் வடக்கிற்கு ஒன்றையும், தெற்கிற்கு ஒன்றையும் கூறுவது கிடையாது. இந்த நாட்டில் அனைத்து மக்களும் சம அந்தஸ்துடன் வாழும் சூழலை உருவாக்குவதுதான் எமது இலக்காகும். எம்மை பிரித்தாள்வதற்கு இனிமேலும் இடமளிக்க முடியாது.

தற்போது சஜித் பிரேமதாசவைப் பாருங்கள், சம்பிக்கவையும் வைத்திருக்கின்றார். மறுபக்கத்தில் ஹக்கீம், ரிஷாத் ஆகியோரையும் வைத்திருகின்றார். மன்னார் செல்லும்பொது சம்பிக்கவை ஒளிப்பார். தெற்கிற்கு செல்லும்போது ரிஷாத்தையும் ஹக்கீமையும் மறைப்பார்.

திஸ்ஸ அத்தநாயக்க கண்டிக்குச் சென்று நாம் தேசிய மக்கள் ஆட்சிக்கு வந்தால் கண்டிப் பெரஹர நிறுத்தப்படும் என்று கூறுகின்றார். சரித்தஹேரத்தும் பெரஹரவை நிறுத்தப்போவதாக கூறுகின்றார். ஹஜ் அல்லது ரம்ழான் ஒன்றைதான் கொண்டாட நாம் அனுமதிப்போம் என்றும் தாடிவளர்ப்பதற்கு இடமளிக்கப்போவதில்லை என்றும் ஹிஸ்புல்லாஹ் கூறுகின்றார்.

மறுபக்கத்தல் பாருங்கள், இனவாதத்தையும், மதவாதத்தையும் பிரதான கருப்பொருள்களாக கொண்ட பொது ஜன

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர்
Kalaikkathir

# செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி தேர்தல்காலங்களில் வெளியாகும் செய்திகள் குறித்து மிகுந்த அவதானம் தேவை

## தேர்தல் ஆணைக்குழு தலைவர் எச்சரிக்கை



இணையத்தளங்களிலும் சமூக ஊடக வலைத்தளங்களிலும் செயற்கை நுண்ணறிவு துணையுடன் உருவாக்கப்பட்ட கணினி மூலமான அட்டவணைகள், கட்சிகள் அல்லது வேட்பாளர்களை பயன்படுத்தி வெளியாகும் தேர்தல்கள் தொடர்பிலான செய்தி, தகவல்களை ஒலி, ஒளிபரப்புதல் அல்லது பிரசுரிக்கப்படும் போது அவை தொடர்பில் ஆராய்ந்து உண்மைக்கு புறம்பான செய்திகள் வெளியாகுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

எதிர்வரும் 21 ஆம் திகதி இடம்பெறவிருக்கும் ஜனாதிபதிதேர்தலைமுன்னிட்டுஇலங்கைசனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104 ஆ (5) (அ) உட்பந்தியின் கீழான ஊடக வழிகாட்டி நெறி ‘சுதந்திரமானதும் மற்றும் நியாயமானதுமான ஜனாதிபதி தேர்தலில் ஊடகங்களின் வகிபாகம்’ எனும் தொனிபொருளில் விசேட கருத்தரங்கு இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் கேட்போர் கூடத்தில் வியாழக்கிழமை இடம்பெற்றது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்கவினால் ஊடகவியலாளர்களுக்கான விசேட விழிப்புணர்வு கருத்தரங்கு நடத்தப்பட்டது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களான எம்.பீ.சி.பெரேரா, அமிர் பாயிஸ், ஏ.சண்முகநாதன் மற்றும் பேராசிரியர் லக்ஷ்மன்திசாநாயக்கஆகியோர்இந்தகருத்தரங்கில் கலந்துகொண்டனர்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக் கவினால் ஊடக வழிகாட்டிநெறிகள் வழங்கப்பட்டது.

கருத்தரங்கில் கருத்துத் தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க –

ஒவ்வோர் ஊடக நிறுவனமும் தமது செய்தி அறிக்கைகளையும் பத்திரிகை தலைப்புச் செய்திகளையும் வழங்கும் போதும், அரசியல் அலுவல்களுடன் தொடர்புடைய வேறு நிகழ்ச்சிகளை ஒலி, ஒளிபரப்பும்போதும் அல்லது பிரசுரிக்கும் போதும் சரியான, சமனிலையான, பக்கச்சார்பற்ற தகவல்களை வழங்க வேண்டும்.

ஊடக வழிகாட்டி நெறிகள் உரிய முறையில் நடைமுறை படுத்தப்படுகின்றனவா என்பதும் இலத்திரனியல் ஊடகங்களின் பக்கச்சார்பின்மை குறித்து மேற்பார்வை செய்ப்படுவதற்காக தேர்தல் ஆணைகுழுவினால் பிரதிநிதிகள் குழு நியமிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

அத்தோடு, இலத்திரனியல் ஊடக நிறுவனங்கள், இணையவலைத்தளங்கள் மற்றும் சமூக ஊடக வலைத்தளங்களில் பயனர்களுக்கும் வழிகாட்டி நெறிகள் தொடர்பிலும் அச்சு ஊடக நிறுவனங்களுக்கான ஊடக வழிகாட்டி நெறிகள் தொர்பிலும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க எடுத்துரைத்தார்.

இதன்போது, தேர்தல் தொடர்பாக அறிக்கையிடும் போது எந்த வேட்பாளர்களுக்கும் கட்சிகளுக்கும் பக்கச்சார்பின்றி செயற்படவேண்டும். என்பதுடன் அரசியல் கட்சி , சுயேச்சைக்குழு மற்றும் வேட்பாளருக்கு பங்கம் ஏற்படாதவாறும் பக்கச்சார்பான ஒரு நிலை ஏற்படாதவாறும் ஊடகங்கள் செய்திகள், அறிக்கைகளை வழங்க வேண்டும் என தெரிவித்தார்.

செய்தி தாள்களில் ஆசிரிய தலையங்கங்களிலும் ஏனைய அறிக்கைகளிலும் இலத்திரனியல் ஊடகங்களிலும் கருத்து தெரிவிக்கும் போது, எந்தவொரு அரசியல் கட்சியை ஊக்கப்படுத்தக்கூடிய விதத்திலும் பாதிப்பைஏற்படுத்தக்கூடியவிதத்திலும் கருத்துரைக்கப்படுதல்கூடாதுஎனவும் குறிப்பிட்டார்.

வாக்கெடுப்பு நடைபெறும் காலப்பகுதியினுள் ஒலி, ஒளிபரப்பு செய்யப்படும் வாக்கெடுப்புடன் தொடர்புடைய நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கும் அறிவிப்பாளர் பெயர், ஆசிரியர் பெயர் என்பன வெளியிடப்படுதல் வேண்டும்.

அத்தகையவிவரங்களைஓர்ஊடக நிறுவனம்வெளியிடாதிருப்பதற்கான உரிமைகளை தொடர்ந்து வைத்திருக்கும் பட்சத்தில் அந்த நிகழ்ச்சிக்கு பொறுப்பானவர் அதன் பொறுப்பை ஏற்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

வேட்பாளரொருவருக்கு எதிராக உறுதிப்படுத்த முடியாத சார்த்துதல்களை, ஏதேனுமொரு நிகழ்ச்சிஅல்லதுசெய்தியறிக்கையின் போது ஊடகங்கள் ஒளிப்பரப்பு செய்வதை தவிர்க்க வேண்டும் என தெரிவித்தார்.

அத்தோடு, வேட்பாளரொருவரினால் அல்லது ஆதரவாளர் ஒருவரினால் வேட்பாளர் அல்லது அரசியல் கட்சி மற்றும் சுயேச்சை குழு தொடர்பில் பிழையான, பாதிப்பு ஏற்படுத்தக்ககூடிய கூற்றுக்களை தெரிவிப்பாராயின் அது தொடர்பிலான விளக்கமளிப்பதற்கு அந்த நபருக்கு கட்டணம் இன்றி சந்தர்ப்பமளிக்கப்பட வேண்டும் என தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அனைத்து பிரசார நடவடிக்கைகளும் எதிர்வரும் 18ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவுபெறும். அதன் பின்னர் , எந்தவொருஅரசியல்கட்சி, வேட்பாளர் அல்லது ஆதரவாளர் தொடர்பான பிரச்சாரநடவடிக்கைகளில் ஈடுபடுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரச்சாரங்களுக்கு 6 வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும், அதன்படி எதிர்வரும் 21ஆம் திகதி தேர்தலுக்கு முன்னர்48மணித்தியாலங்களுக்குமுன் அனைத்து பிரச்சார நடவடிக்கைகளும் நிறுத்தப்பட வேண்டும்.

பொதுஅல்லதுதனியார்வாகனங்களில் வேட்பாளர்கள் மற்றும் கட்சிகளை ஊக்குவிக்கும் வகையில் ஒட்டப்பட்டுள்ள ஸ்டிக்கர்களை அகற்றுவதற்கு இலங்கை பொலிஸாருக்கு அதிகாரம் உள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவினால் தேர்தல் முடிவுகள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும் வரை வாக்கெடுப்பின் உத்தியோகபூர்வமற்ற முடிவுகளை பகிர்வதைத் தவிர்க்க வேண்டும்.

தேர்தலுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் உண்மைக்குப் புறம்பான தகவல்கள் பகிரப்படும் பட்சத்தில் அதனை உறுதிபடுத்த வேணடும்.

வாக்கெடுப்பு நிலையத்திற்கு தொலைபேசி கொண்டு செல்வது தடை விதிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி வேட்பாளர்களின் வாக்குச் சீட்டுகளை புகைப்படம் மற்றும் காணொளி எடுத்து விளம்பரப்படுத்துவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதிகமாக இணையத்தளங்களிலும் சமூக ஊடக வலைத்தளங்களிலும் செயற்கை நுண்ணறிவு துணையுடன் உருவாக்கப்பட்ட கணினி மூலமான அட்டவணைகள், கட்சிகள் அல்லது வேட்பாளர்களை பயன்படுத்தி வெளியாகும் தேர்தல்கள் தொடர்பிலான செய்தி, தகவல்களை ஒலி, ஒளிபரப்புதல் அல்லது பிரசுரிக்கப்படும் போது அவை தொடர்பில் ஆராய்ந்து உண்மைக்கு புறம்பான செய்திகள் வெளியாகுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போதைய காலப்பகுதியில் ஊடகங்களில் பிரசுரிக்கப்படும் தகவல்கள், செய்திகள் ஒரு நபருக்கு சார்பானதாககாணப்பட்டால்மக்களிடத்தில் நம்பகத்தன்மையினைஏற்படுத்துவதுடன் மக்கள்அவ்வழியினைபின்தொடருவதை அவதானிக்க முடிகின்றது. எனவே ஊடகங்கள் பக்கச்சார்பின்றி செயலாற்ற வேண்டும்.

அச்சு ஊடக நிறுவனத்தினால் வாக்கெடுப்பு பற்றி அறிக்கையிடும் போது இவ்வாறான விடயங்களை கருத்திற்கொள்ளவேண்டும். அச்சு ஊடக நிறுவனத்தினால் வாக்கெடுப்பு பற்றி அறிக்கையிடும்போதுநடுநிலைமையுடன் ஒரு விடயத்தை தெரியப்படுத்துதல் வேண்டும்.

வாக்கெடுப்பு நிலையத்தின் அல்லது உட்புறத்தில் நிழற்படங்களை எடுத்து தேர்தல் ஆணைக்குழுவின் எழுத்து மூலமான உத்தரவின்றி வெளியிடக்கூடாது. அனுமதியின்றி பெறப்பட்ட ஏதேனும் நிழற்பட்தை செய்தி தாளில் பிரசுரித்தல் கூடாது. ஆணைக்குழுவின் அனுமதியுடன் பெறப்பட்டநிழற்டங்களையேவாக்கெடுப்பு நடைபெற்றதன் பின்னர் பயன்படுத்த வேண்டும்.

சமூகத்திடையே அல்லது அரசியல் செயற்பாட்டாளர்களுக்கு இடையே வன்முறைகள் ஏற்படக்கூடிய அரசியலை மேம்படுத்தும் செயற்பாடுகளை அச்சு ஊடகங்கள் தவிர்க்க வேண்டும்.

வாக்கெடுப்பின் போது தேவையற்ற விடயங்களைதவிர்த்து சுதந்திரமானதும் நீதியானதுமானதொரு தேர்தலை நடத்துவதற்கும் வன்முறையான சட்ட மீறல்களை தடுத்து செயற்படக்கூடிய வகையில், இலத்திரனியல் ஊடக நிறுவனங்கள், இணையத்தளங்கள் மற்றும் சமூக ஊடக வலைத்தளங்களில் பயனர்களுக்கும் வழிகாட்டி நெறிகள் தொடர்பிலும் அச்சு ஊடக நிறுவனங்களுக்கான ஊடக வழிகாட்டி நெறிகள் தொர்பிலும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க மேலும் இதன் போது எடுத்துரைத்தார்.(05)

# ஜனாதிபதி வேட்பாளரின் ஆதரவாளர்கள் பயணித்த பஸ் மீது கோரத் தாக்குதல்

## மொனராகலையில் நால்வர் காயம்



மொனராகலை பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்ட குழுவினர் பயணித்த பஸ் ஒன்றின் மீது இனந்தெரியாத நபர்கள் சிலர் தாக்குதல் நடத்தியுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது. தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரான அநுரகுமார திசாநாயக்கவுக்கு சார்பாக மொனராகலை பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில் கலந்து கொண்ட குழுவினர் பயணித்த பஸ் மீதே இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இந்த தாக்குதலின் போது நான்கு பேர் காயம டைந்துள்ள நிலையில் புத்தல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (05)

# வாகன இறக்குமதிக்கான தடையை நீக்க தீர்மானம்

அனைத்து வாகனங்களுக்குமான இறக்குமதி தடையை அடுத்த ஆண்டு (2025) பெப்ரவரி மாதம் நீக்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

அந்நிய செலாவணி கையிருப்பு கணிசமான அதிகரிப்பு, ரூபாயின் பெறுமதி அதிகரிப்பு போன்ற காரணங்களின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# காசாகும் கல்வி

கல்வியைத் தனியார் மயமாக்குவது அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் திட்டங்களில் ஒன்று. முதலில் உயர் கல்வித்துறையில் தனியார் பல்கலைக்கழங்களை அனுமதித்து அதற்குள் தனியாரை நுழைப்பதே அவரது திட்டம். அதற்கேற்ற வகையில் பட்டய (டிப்ளோமா) மற்றும் பட்டப்பின் பட்டய (போஸ்ட் கிராயுவேஷன் டிப்ளோமா) ஆகியவற்றை வழங்கக்கூடிய தனியார் கல்வி நிறுவனம் ஒன்றை வெள்ளிக்கிழமை அவர் திறந்தும் வைத்திருந்தார். விரைவில் ரணிலின் ஆசீர்வாதத்துடன் இந்த நிறுவனம் பட்டக் கல்விக்குள்ளும் கால்களை நீட்டும் என்று எதிர்பார்க்கலாம். இந்தக் கல்வி நிறுவகத்தைத் தொடங்கியுள்ள விஜயா நிறுவனம் ரணிலுக்கு நெருக்கமானதும்கூட

உயர் கல்வித்துறையை தனியார்மயப்படுத்துவதன் மூலம் அன்னியச் செலாவணியை ஈட்ட முடிவதுடன், அன்னியச் செலாவணி இலங்கையில் இருந்து வெளியேறுவதையும் தடுக்கமுடியும் என்று அரசுத் தலைவர் காரணம் கூறுகின்றார். மேலோட்டமாகப் பார்க்க இது நியாயமானதாகத் தோன்றினாலும் பணம் இருப்பவர்கள் மட்டும் தரமான மேற்படிப்பைப் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலையை இலங்கையில் இது நிச்சயம் உருவாக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

உயர்கல்வித்துறை இத்தகைய தனியார் மயமாக்கல் ஆபத்தை எதிர்கொண்டிருக்கும் நிலையில் பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் பாடசாலைத்துறை ஏற்கனவே தனியார்மயமாக்கலுக்குள் மெல்ல மெல்ல நுழைக்கப்பட்டுவிட்டதைப் புடம்போட்டுக்காட்டுகின்றது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்தா அத்துக்கோரள, கடந்த ஆறு வருடங்களாக அரச பாடசாலை மாணவர் சேர்க்கையில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்கசரிவைச்சுட்டிக்காட்டுகின்றார். பேராசிரியர் கோரளவின் கூற்றுப்படி, 2018 முதல் 2023 வரை அரசுப் பள்ளிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை 3 லட்சத்து 32 ஆயிரத்து 84 குறைந்துள்ளது.

மேலும், அதே காலகட்டத்தில் அரசுப் பாடசாலைகளின் எண்ணிக்கை 79 குறைந்துள்ளது. அதாவது மூடப்பட்டுள்ளன. கடந்த ஆறு ஆண்டுகளில் ஆசிரியர்களின் எண்ணிக்கை 9,547 குறைந்துள்ளன, அரசு பொருளாதார நெருக்கடியைச் சந்தித்த காலப் பகுதியில் இப்படி நிகழ்வது சாத்தியம்தானே என்று எடுத்துக்கொள்ள முடியாது ஏனென்றால், இதே காலப் பகுதியில் தனியார் பாடசாலைகள் எண்ணிக்கை 15 ஆல் அதிகரித்துள்ளது. மாணவர்கள் தனியார் பாடசாலைகளை நோக்கித் திசை திருப்பப்பட்டுள்ளனர். அரச பாடசாலைகளில் வளப்பற்றாக்குறைகள் நிலவும் போது பணம் இருக்கும் பெற்றோர் தனியார் பாடசாலைகளை நாடி தரமான கல்வியை தமது பிள்ளைகளுக்கு வழங்குவதற்கே முன்னிற்பர். இது வசதி படைத்த ஏனைய பெற்றோரையும் நடுத்தர வர்க்கப் பெற்றோரையும் தனியார் பாடசாலையை நோக்கி உந்தித் தள்ளும். அது அரச பாடசாலைகளுக்கு மேலும் மேலும் பின்னடைவுகளை ஏற்படுத்தும், பாடசாலைக் கல்வியில் தனியார் மயமாக்கலை விரைவுபடுத்தும்.

ஒருபக்கம் உயர் கல்வியில் தனியார் பங்களிப்பைத் திட்டமிட்டு நுழைக்கும் அரசு மறுபுறத்தில் பாடசாலைக் கல்வியில் தனியார் பங்களிப்பு விரைந்து வளர்வதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்துகின்றது. மொத்தத்தில் கல்வியை தனியார் மயமாக்கும் செயற்பாடுகளே விரைவுபடுத்தப்படுகின்றன. ரணில் அரசுத்தலைவராகத் தொடர்ந்தால் சமையல் வாயுவும் மின்சாரமும் கிடைக்கும் என்பதைப் போலவே எதிர்காலத்தில் கல்வியைக் காசுகொடுத்துத்தான் வாங்கவேண்டிய நிலையும் வரும்.

# திசாநாயக்கதானா?



55 வயதான இலங்கை அரசியல்வாதியான அநுரகுமார திசாநாயக்க ஆட்சியில் ஒருபோதும் இருந்தவரில்லை. தேசிய மக்கள் சக்தி, அவர் வழிநடத்தும் அரசியல் கூட்டணி, அது முக்கிய எதிர்க்கட்சிகூட இல்லை. 225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் இந்தக் கட்சிக்கு மூன்று இடங்கள் மட்டுமே உள்ளது, இருந்தாலும் அங்கு அது நான்காவது பெரிய சக்தியாகும்.

ஆனால் இப்போது பல மாதங்களாக, திசாநாயக்க இலங்கை அரசியலுக்குள் வேறு வகையான அதிகாரத்தை அனுபவித்து வருகிறார், இது எழுச்சி பெறும் அரசியல் சக்தியாக அவருக்கு பிராந்திய வல்லரசான இந்தியாவிலிருந்தும்கூட அங்கீகாரத்தைப் பெற்றுத்தந்தது. மேலும் அவரது கட்சி பெரும்பாலும் இந்தியாவின் முக்கிய புவிசார் அரசியல் போட்டியாளரான சீனாவுக்கு நெருக்கமானது என்று கருதப்படுகின்றது.

செப்டம்பர் 21 ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பில் அவர்தான் வெற்றிபெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இது ஆச்சியரியமானது. 38 வேட்பாளர்களில் அவர்தான் முதலாவது நபர் என்று சில கருத்துக்கணிப்புக்கள் கூறுகின்றன.

அவருடன் போட்டியிடும் மற்றைய முதன்மை வேட்பாளர்கள் அனைவருக்கும் மிகச் சிறந்த அரசியல் பாரம்பரியம் அல்லது தொடர்ச்சி உண்டு. நாட்டின் மிக முக்கிய அரசியல் குடும்பங்களில் இருந்து பரிச்சயமான முகங்கள் நிறைந்த வரிசை இது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் மூத்த மகன் நாமல் ராஜபக்ச, முன்னாள் ஜனாதிபதி ஆர் பிரேமதாசவின் மகன் சஜித் பிரேமதாச; மற்றும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இவர் நாட்டின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவின் மருமகன்.

இந்த வரிசையில் திஸாநாயக்க தனித்து நிற்கிறார்: அவர் ஜனதா விமுக்தி பெரமுனாவின் (ஜேவிபி) தலைவர். இதுவரை தேசிய அரசியலில் ஆட்சியதிகாரத்தை நெருங்கியிருக்காத கட்சி இது, ஆனால் திசாநாயக்கா இப்போது ஆட்சியமைக்க விரும்புகிறார்.

அவரது கட்சி மற்றும் அது தலைமையிலான கூட்டணியான தேசிய மக்கள் கூட்டணிக்கு திருப்புமுனை 2022 இல் வந்தது, நாட்டின் பொருளாதாரம் சரிந்தது, இது அத்தியாவசியப் பொருட்களின் பரவலான தட்டுப்பாட்டிற்கும், பணவீக்கத்திற்கும் வழிவகுத்தது.

அதற்கெதிராக ஒரு வெகுஜன எதிர்ப்பு இயக்கமான- அரகலயா ன்'போராட்டத்துக்கான சிங்களவர்கள்தி கிளர்ந்தது. ஆளும்தரப்புக்கு எதிரான இந்தப் போராட்டத்தால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும் அவரது மூத்த சகோதரரான மகிந்த ராஜபக்சவும் பதவி விலகவேண்டியவர்களானார்கள்.

அரகலய இயக்கத்தின் தலைமைத்துவத்தை உத்தியோகபூர்வமாகஎந்தஅரசியல்கட்சியும்கோரவில்லை என்றாலும், கொழும்பின் அழகிய காலி முகத்திடலில் கூடாரங்களை அமைத்து, பொது வேலைநிறுத்தங்களை ஒழுங்கமைத்து, தினசரி போராட்டங்களை நடத்தி, ஜே.வி.பி. அந்தப் போராட்டத்திற்கு கணிசமான அளவில் உதவியது. ராஜபக்ச சகோதரர்களின் ராஜினாமாவால் உருவாக்கப்பட்ட அதிகார வெற்றிடம், பரந்த மாற்றத்திற்கான அழைப்புகளை விரிவுபடுத்த திசாநாயக்க மற்றும் ஜே.வி.பி.க்கு வழிவகுத்தது.

சமூக நீதி மற்றும் ஊழலுக்கு எதிரான அவர்களின் வாதங்கள், ஏற்கனவே ஏமாற்றமடைந்திருந்த குடிமக்களை ஈர்த்தது. இதனால் ஓர் ஓரத்தில் இருந்த அந்தக் கட்சி நம்பகமான, பெரிய அரசியல் சக்தியாக வளர்ந்தது. மேலும் திஸாநாயக்கவின் தனிப்பட்ட செல்வாக்கும் பெருமளவில்உயர்ந்துள்ளது.

'அமைப்பை மாற்றும் முயற்சியில் அவர் நேர்மையானவர்என்பதைநான்காண்கிறேன்'என்று எழுத்தாளரும் அரசியல் ஆய்வாளருமான காமினி வியங்கொட அல் ஜசீராவிடம் கூறினார். வியங்கொட இலங்கையில் ஜனநாயக சீர்திருத்தத்திற்காகப் பரப்புரை செய்யும் புரவேசி பாலய சிவில் சமூக இயக்கத்தின் இணை அழைப்பாளர் ஆவார்.

'ஊழலுக்கான கதவுகளை மூடுவேன் என்று அவர் கூறும்போது, அவர் அதைக் குறிக்கிறார் என்று நான் நம்புகிறேன். அவர் அதைச் செய்ய முடியுமா இல்லையா என்பது வேறு விஷயம், ஆனால் இந்த உண்மையான தன்மையை வேறு எந்த அரசியல் தலைவரிடமும் நான் காணவில்லை' என்று வியங்கொட கூறினார்.

**கிளர்ச்சியிலிருந்து மக்கள் முறையீடு வரை**

இலங்கையின்அனுராதபுரமாவட்டத்தில்,தலைநகர் கொழும்பிலிருந்து 177 கிமீ (110 மைல்) தொலைவில் உள்ள தம்புத்தேகம கிராமத்தில் ஒரு கிராமப்புற நடுத்தர குடும்பத்தில் பிறந்த திசாநாயக்க, களனி பல்கலைக்கழகத்தில்அறிவியல் பட்டப்படிப்பை முடித்தார்.

பள்ளிப் பருவத்தில் இருந்தே ஜே.வி.பியில் ஈடுபட்டு வந்த அவர், 2000ஆம் ஆண்டு முதல் தடவையாக நாடாளுமன்ற உறுப்பினரானார்.

திசாநாயக்க 2014இல் ஜே.வி.பியின் தலைவராக நியமிக்கப்பட்டார், அதன் பின்னர் கட்சியின் வன்முறை மிகுந்த கடந்த காலத்திலிருந்து அதன் பிம்பத்தை மாற்றியமைக்க முயன்றார்.

அவரது 1971 மற்றும் 1980 இரு தடவை மார்க்ஸிட் கிளர்ச்சிகளை வழிநடத்தியிருக்கிறது. ஆனால் அவை இரண்டும் தோல்வியடைந்தன. ஜே.ஆர்.ஜெயவர்தன மற்றும் ஆர்.பிரேமதாசாவின் ஏகாதிபத்திய மற்றும் முதலாளித்துவ ஆட்சியைத் தூக்கி எறியவேண்டும் என்று 1988- - 89ல் ஜே.வி.பி.யால் தொடங்கப்பட்ட ஆயுத எழுச்சி இலங்கை வரலாற்றில் குருதிச் சகதியில் தோய்ந்த காலகட்டமாக மாறியது.

பரவலான கொலைகள் மற்றும் அரசியல் படுகொலைகள், உத்தியோகபூர்வமற்ற ஊரடங்குச் சட்டம், நாசவேலைகள் மற்றும் ஜே.வி.பி.யால் அழைப்பு விடுக்கப்பட்ட வேலைநிறுத்தங்கள் ஆகியவை அன்றைய அவலங்களாக இருந்தன. இந்தக் கிளர்ச்சிகளின்போது ஜே.வி.பியால் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர் என்று நம்பப்படுகிறது - அரசியல் எதிரிகளுக்கு மேலதிகமாக புத்திஜீவிகள், கலைஞர்கள் மற்றும் தொழிற்சங்கவாதிகளும் இவர்களில் அடங்குவர்.

பெரும் எண்ணிக்கையிலான கைதுகள், சித்திரவதைகள், கடத்தல்கள் மற்றும் படுகொலைகள் மூலம் ஜே.வி.பி. கிளர்ச்சியை கொடூரமாக நசுக்கிய இலங்கை ஆட்சியாளர்கள் பழிவாங்கினர். ஆளும்தரப்பின் அடக்குமுறையில் குறைந்தது 60 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர், இதில்

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# திசாநாயக்கதானா?

4ம் பக்க தொடர்ச்சி...........

பெரும்பாலான மூத்த ஜேவிபி தலைவர்கள் உட்பட, கட்சியின் நிறுவுனருமான ரோஹன விஜேவீரவும் அடக்கம்.

தோல்வியடைந்த கிளர்ச்சிகளின் பின்னர் கட்சி, வன்முறையைக் கைவிட்டு தேர்தல் ஜனநாயகத்தை நோக்கித் திரும்பியபோது, திசாநாயக்க ஜே.வி.பியின் அரசியல் தலைமைப்பீட உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

அவர் ஜேவிபியின் தலைவராகியவுடன் மே 2014இல் பிபிசி உலக சேவைக்கு வழங்கிய செவ்வி ஒன்றில், கட்சியின் கடந்தகாலக் குற்றங்களுக்காக மக்களிடம் மன்னிப்பு கேட்டார். ஜே.வி.பி. தனது முந்தைய அவதாரத்தில் இலங்கை மீது கட்டவிழ்த்துவிட்ட வன்முறைக்கு மன்னிப்பு கேட்பது இதுவே முதல் மற்றும் கடைசி முறையாகும்.

கட்சியின் சில உறுப்பினர்களாலும், இலங்கை இடதுசாரிகளின் சில பகுதியினராலும் மன்னிப்புக் கேட்டதற்காக அவர் கடுமையாக விமர்சிக்கப்பட்டார், அதன் பின்னர் திஸாநாயக்க கடந்த காலத்தை கட்டமைப்பதில் மிகவும் கவனமாக இருந்தார். கட்சியின் தவறுகளுக்காக அவர் பலமுறை வருத்தம் தெரிவித்தாலும் மீண்டும் மன்னிப்பு கேட்காமல் நிறுத்திவிட்டார்.

நிச்சயமாக, கடந்த காலம் ஜே.வி.பி.யையும் நாட்டையும் இன்னும் ஆட்டிப்படைக்கிறது. இப்போது ஜனாதிபதியாக உள்ள விக்கிரமசிங்க, 1980களில் ஜே.வி.பி கிளர்ச்சியின் போது பிரேமதாசவின் ஆளும்தரப்பில் ஒரு மூத்த அமைச்சராக இருந்தார், மேலும் அவர் அடக்குமுறையில் ஒரு தீவிரமான பங்கைக் கொண்டிருந்தார் என்ற குற்றச்சாட்டுகளுடன் இன்னும் போராடுகிறார். இதேவேளை, பல வயதான இலங்கையர்கள் ஜே.வி.பி. செய்த பயங்கரங்களையும் மறக்கவில்லை.

ஒருகாலத்தில் ஜே.வி.பி.யின் கொலை இலக்குகளாக இருந்த புத்திஜீவிகள், கலைஞர்கள், ஓய்வுபெற்ற பொலிஸ் மற்றும் படையினர், தொழிற்சங்கவாதிகள் என சமூகத்தில் ஒரு பரந்த கூட்டணியைக் கட்டியெழுப்புவதில் தற்போது திஸாநாயக்க வெற்றி பெற்றுள்ளனர் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். கட்சியின் மிகப்பெரிய கவர்ச்சியாக அமைந்துள்ளது ஊழலைச் சமாளிப்பதற்கான அதனது வாக்குறுதி.

89-, 90களில் நடந்தவற்றுக்காக ஜே.வி.பியைக் குறைகூறுவது தவறு என நான் நினைக்கின்றேன் என வியங்கொட கூறுகின்றார். ஏனெனில் இன்று நாம் காண்பது 1980களில் இருந்த ஜேவிபியை அல்ல.

அதனால் செப்டம்பர் 21 அன்று வாக்களிக்கும்போது இலங்கை தன்னை நம்பும் என்று திசாநாயக்க நம்புகிறார்,

1948இல் சுதந்திரம் பெற்றதில் இருந்து, இலங்கை இரண்டு மேலாதிக்க அரசியல் கட்சிகளால் வழிநடத்தப்படுகிறது. ஐக்கிய தேசியக் கட்சி (யுஎன்பி) மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (ஸ்ரீலசுக), அல்லது அவர்கள் தலைமையிலான கூட்டணிகள் அல்லது பிரிந்து சென்ற அணிகளாலேயே நாடு ஆளப்பட்டு வந்துள்ளது.




திசாநாயக்க ஜனாதிபதியாக வருவதற்கு அது உடைக்கப்படவேண்டும். ஜேவிபி எதிர்கொள்ளும் சவால் அதுமட்டுமல்ல.

2022 அரகலயவிற்குப் பின்னர் ஊழல் எதிர்ப்புக் கூட்டணியைக் கட்டியெழுப்புவதில் திசாநாயக்க வெற்றிபெற்றாலும் மற்றுமொரு முக்கிய சமூகத்துடனான ஜேவிபியின் குழப்பமான கடந்த காலமும் அதன் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் மழுங்கடிக்கிறது.

ஜே.வி.பி நீண்டகாலமாக இலங்கையில் இந்தியாவின் எந்தத் தலையீட்டிற்கும் எதிராக உள்ளது. 1980களில் இருந்து 2009 வரை தேசத்தை துண்டாடிய தமிழ் பிரிவினைவாத போராட்டம் இலங்கை மீதான இந்தியாவின் செல்வாக்குடன் தொடர்புடையது என்று அது கருதுகிறது.

உண்மையில், 1987 முதல் 1990 வரை கொழும்புடன் இணைந்து தமிழ் கிளர்ச்சியாளர்களை எதிர்த்துப் போராட இந்தியா இலங்கைக்கு அமைதிப் படை என்ற பெயரில் படைகளை அனுப்பியது. அதுமட்டுமன்றி தனித்தனியாக, இலங்கையின் அரசமைப்பின் 13ஆவது திருத்தம் என அறியப்படும், மாகாணங்களுக்கு சில அதிகாரங்களைப் பகிரும் சட்டத்தையும் கொழும்பு ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்தித்து.

முன்னர் அரசிற்கு எதிராக ஆயுதம் ஏந்தியிருந்த போதிலும், ஜே.வி.பி., இலங்கையை பிளவுபடுத்தும் தனிநாடு என்ற இலக்கின் காரணமாக தமிழ் கிளர்ச்சி இயக்கத்தை எதிர்த்தது. 2000களில், அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் கீழ் இலங்கை தமிழ் பிரிவினைவாத இயக்கத்தை நசுக்கியபோது, ஜே.வி.பி ஆளும்தரப்பை ஆதரித்தது.

ஆயுதக் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கிய தமிழ்ப் போராளிக் குழுவான தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான ராஜபக்ச ஆட்சியாளர்களின் போரை ஆதரித்ததற்காக தாம் வருத்தப்படவில்லை என்று திசாநாயக்க கூறியுள்ளார்.

உள்நாட்டுப் போரின்போது நடந்ததாகக் கூறப்படும் போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டும் என்று இலங்கைத் தமிழர்களும் சர்வதேச சமூகத்தின் சில பகுதிகளும் நீண்ட காலமாகக் கேட்டுக் கொண்டிருக்கின்றன. குற்றச்சாட்டுகளில் சட்டத்திற்கு புறம்பான படுகொலைகள், மருத்துவமனைகள் உட்பட பொதுமக்கள் இலக்குகள் மீது கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்கள், பலவந்தமாக காணாமல் போதல்கள், பெரும் பொதுமக்கள் படுகொலைகள், சித்திரவதை, பாலியல் வன்முறை மற்றும் மனிதாபிமான உதவி மறுப்பு ஆகியவை அடங்கும்.

ஆனால் ஜேவிபி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அத்தகைய விசாரணையை நிராகரித்துள்ளது. உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட எவரையும் தண்டிக்க தேசிய மக்கள் சக்தி முயலாது என திசாநாயக்க தெரிவித்துள்ளார். மாறாக, உள்நாட்டுப் போரின்போது என்ன நடந்தது என்பதைக் கண்டறிய தென்னாப்பிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் படி, ஒரு பொறிமுறையை நிறுவ அவர் பரிந்துரைக்கிறார்.

தொடர்ச்சி 6 ம் பக்கம்...........



# திசாநாயக்கதானா?

5ம் பக்க தொடர்ச்சி...........



'அவர்கள் ன்ஜே.வி.பி.தி 'ஒற்றையாட்சி அரசில்' உறுதியாக நிலைநிறுத்தப்பட்டுள்ளனர். அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் அவர்களுக்கு தெளிவான நிலைப்பாடு இல்லை,' என எழுத்தாளரும் ஆய்வாளருமான குசல் பெரேரா தெரிவித்தார்.

1987 ஆம் ஆண்டு சட்டமாக்கப்பட்டது முதல், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் இன்னும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்தத்திருத்தமானது பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை மாகாண சபைகளுக்குப் பகிர்ந்தளிக்க வழி வகுத்தது. ஆனால், வடக்கில் தனிநாடு உருவாக்கப்படும் என வாதிட்ட விமர்சகர்களின் அரசியல் எதிர்ப்புக்கு அஞ்சி எந்தவொரு ஜனாதிபதியும் அதனை நடைமுறைப்படுத்தவில்லை.

திசாநாயக்க, 'ஒற்றுமைக்காக நிற்கிறோம் என்று கூறி தமது சிங்கள பௌத்த இனவாதத்தை மூடிமறைப்பதைத் தவிர ஜேவிபிக்கு வேறு எந்த ஜனநாயக நிலைப்பாடும் இல்லை' என்று குறிப்பிட்ட பெரேரா, 'எந்தவொரு இனவாத தீவிரவாதத்தையும் பகிரங்கமாக ஜேவிபி கண்டித்ததில்லை' என்றும் கூறினார்.

வியங்கொடவின் கூற்றுப்படி, '1968 இல் விஜேவீரவால் உருவாக்கப்பட்ட ஒரு இனவாதக் கட்சி,' ஜே.வி.பி. வரலாற்று ரீதியாக சிங்கள பௌத்த சித்தாந்தத்துடன் தன்னை அடையாளப்படுத்தியுள்ளது. அதன் சொல்லாடல்கள் இலங்கையின் பெரும்பான்மை சமூகத்தின் கவலைகளையே பிரதிபலிக்கிறது. இதன் விளைவாக, இது கிராமப்புற சிங்கள பௌத்த இளைஞர்களிடமிருந்து ஆதரவைப் பெறுகிறது. - மேல்தட்டு எதிர்ப்பு மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வுகளையும் தட்டியெழுப்புகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் இலங்கை வாக்களிக்கத் தயாராகி வரும் நிலையில், பெருளாதாரம் அளவுக்கு வேறு எந்தப் பிரச்சினையும் விவாதத்தின் மையமாக இல்லை.

ஏப்ரல் 2022 இல், இலங்கை ஆளும்தரப்பு சுதந்திரத்திற்குப் பிறகு முதல் முறையாக தனது கடனைத் திருப்பிச் செலுத்த முடியாது என்று அறிவித்தது. கோட்டாபய ராஜபக்சவுக்குப் பிறகு, ஜனாதிபதி விக்கிரமசிங்க, நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் சரியான பாதைக்குக் கொண்டு வருவதற்கான முயற்சியில் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து (ஞூனிய்) நிதிப் வசதியைப் பெற்றார்.

சிலஆய்வாளர்களும்விக்கிரமசிங்கவின்ஆதரவாளர்களும் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தைப் பாராட்டினாலும், பல சாதாரண இலங்கையர்கள் மீதான பாரத்தைக் குறைக்கும் வகையில் ஜே.வி.பி. சர்வதேச நாணய நிதியத்துடன் மீண்டும் பேச்சு நடத்த முயற்சிக்கும் என்று திஸாநாயக்க கூறியுள்ளார்.

நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, ஆளும்தரப்பு வரி உயர்வுகள், மானியக் குறைப்புக்கள் மற்றும் பொதுத்துறை சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியது, இது மக்களின் வாழ்க்கைச் செலவைப் பெருமளவு அதிகரித்தது மற்றும் சமூக நலன் மீதான அரசின் ஆதரவைக் குறைத்தது. அதிக வரிகள் மற்றும் குறைக்கப்பட்ட மானியங்கள், குறிப்பாக எரிபொருள் மற்றும் மின்சாரம் போன்ற அத்தியாவசிய தேவைகளின் கட்டண அதிகரிப்பு என்பன குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட குடும்பங்களைப் பெருமளவில் பாதித்துள்ளது.

திசாநாயக்கவின் தற்போதைய பொருளாதாரக் கொள்கையானது அவரது பாரம்பரிய சோசலிச நிலைப்பாட்டிலிருந்து குறிப்பிடத்தக்க மாற்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கொழும்பில் உள்ள சந்தை சார்பு சிந்தனைக் குழுவான அட்வகேடா (பு-ஸலிஉழிமிழி) இன்ஸ்டிட்யூட்டின் தலைமைச் செயல் அதிகாரி தனநாத் பெர்னாண்டோ கூறுகிறார்.

'அவர் இப்போது வர்த்தக சார்பு அணுகுமுறைக்குச் சார்பாக வாதிடுகிறார், கட்டணக் கட்டமைப்பை எளிமைப்படுத்துதல், வணிகச் சூழலை மேம்படுத்துதல், வரி நிர்வாகத்தை சீர்திருத்துதல், ஊழலுக்கு முடிவுகட்டுதல் மற்றும் தனியார் துறையை வளர்ச்சியின் இயந்திரமாக நிலைநிறுத்துதல் ஆகியவற்றை வலியுறுத்துகிறார்' என்று பெர்னாண்டோ அல் ஜசீராவிடம் கூறினார். 'இருப்பினும், கடன் பேச்சுக்களில் அவரது நிலைப்பாடு தெளிவாக இல்லை' என்றும் தெரிவித்தார்.

இருப்பினும், திஸாநாயக்க, 'நாணய நிதியத்தின் தற்போதையவேலைத்திட்டத்தில்இருப்பதற்கானஅர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளார்', பெர்னாண்டோ கூறினார்.

இதற்கிடையில், இலங்கையின் 17ஆவது சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று இடதுசாரி சிந்தனைக் குழுவான அரசியல் பொருளாதார நிறுவனம் (ஞூஊணசி) கூறியுள்ளது. தனிப்பட்ட வேட்பாளர்கள் அல்லது அவர்களின் கொள்கைகள் பற்றி கருத்து தெரிவிக்க விரும்பாத அந்த அமைப்பின் செய்தித் தொடர்பாளர், 'ஐஎம்எஃப் உடன்படிக்கையை மறுபரிசீலனை செய்வது இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் எதிர்கால உறுதிப்பாட்டுக்கு இன்றியமையாததாகும். தற்போதைய நிபந்தனைகள் சிறந்த நடைமுறைகளுடன் இணைக்கப்படவில்லை மற்றும் நாட்டின் நிதி ஆரோக்கியம் மற்றும் சமூக நல்வாழ்வுக்கு குறிப்பிடத்தக்க அபாயங்களை ஏற்படுத்துகின்றன. இலங்கையின் அடுத்த ஜனாதிபதியாக வருபவர்களுக்கு, எமது ஆலோசனை, ணிசமான கடன் குறைப்பு, யதார்த்தமான நிதி இலக்குகள் மற்றும் இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகள் மீதான இறையாண்மைக்கு மதிப்பளித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது" என்றார் அவர்.

அந்த இலக்குகளை சிறப்பாக நிறைவேற்றக்கூடிய வேட்பாளர் திசாநாயக்கவா? மேலும் வாக்காளர்கள் விரும்புவது அதுதானா? இந்தக் கேள்விகளுக்கு இலங்கை செப்டம்பர் 21 பதிலளிக்கும்.

அல்ஜசீரா

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



காலைக்கதிர்
Kalaikkathir

# கல்வி, சுகாதாரம் ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்கவேண்டும்

## அதிகளவு இலங்கையர்கள் எதிர்பார்ப்பு

கல்வி சுகாதாரம் போன்றவற்றிற்கு அரசாங்கம் செலவிடும் தொகையை அதிகரிக்கவேண்டும் என இலங்கையர்கள் விரும்புவது கருத்துக்கணிப்பின் மூலம் தெரியவந்துள்ளது.

சுகாதார கொள்கைகளிற்கான நிறுவனம் மேற்கொண்ட கருத்துக்கணிப்பின் போது இது தெரியவந்துள்ளது.

செப்டம்பர் 2022 முதல் நிதிநெருக்கடி காரணமாக அரசாங்கம் தனது வரவுசெலவுதிட்டத்தில் வேறு விடயங்களிற்கு முன்னுரிமை வழங்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது.

நாங்கள் பொதுமக்களிடம் எந்த இரண்டு விடயங்களிற்கான நிதியை அரசாங்கம் அதிகரிக்கவேண்டும் என தொடர்ச்சியாக கேட்டுவந்துள்ளோம்.

அரசாங்கம் எதற்கான நிதியை குறைக்கவேண்டும் எனவும் கேட்டுவந்துள்ளோம்.

2024 முழுவதும் நாங்கள் மேற்கொண்ட கருத்துக்கணிப்பின் போது இலங்கை அரசாங்கம் சுகாதாரத்திற்கும் கல்விக்கும் அதிகளவு நிதியை ஒதுக்கவேண்டும் என மக்கள் தெரிவித்தனர்.

இலங்கையின் பெரும்பான்மையான மக்கள் அனைத்து சமூகங்கள் அனைத்து பகுதிகளையும் சேர்ந்தவர்களின் கருத்தாக இது காணப்பட்டது.

இதற்கு அடுத்ததாக விவசாயதுறைக்கு நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் என 33 வீதமானவர்களும் ,உணவு உதவிக்கு அதிக நிதியை ஒதுக்கீடு செய்யவேண்டும் என வீதமானவர்களும் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் அனைத்து மக்களும் கல்வி சுகாதாரத்தி;ற்கு அதிக நிதியை ஒதுக்கவேண்டும் என கருதுகின்றனர்,வறிய மக்களிற்கும் சிறந்த பொருளாதார நிலையிலுள்ள மக்களிற்கும் இதுவே முன்னுரிமைக்குரிய விடயமாக காணப்படுகின்றது,

18 முதல் 29 வயதிற்கு உட்பட்டவர்கள் கல்விக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படவேண்டும் என கருதும் அதேவேளை வயது முதிர்ந்தவர்கள் சுகாதாரத்திற்கு அதிக நிதியை ஒதுக்கீடு செய்யவேண்டும் என விரும்புகின்றனர்.

(05)

# 3 கோடி ரூபா பெறுமதியான அம்பருடன் ஹொரணையில் ஒருவர் கைதானார்

ஹொரணை ஹொரகெட்டிய பிரதேசத்தில் 05 கிலோ 620 கிராம் அம்பர் (திமிங்கலத்தின் வாந்தி) தொகையுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மேல் மாகாணத்தின் தெற்கு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

சந்தேக நபர் இந்த அம்பர் தொகையை ஒரு கிலோ தலா 50 லட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்யவுள்ளதாக மேல் மாகாணத்தின் தெற்கு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து, பொலிஸ் அதிகாரிகள் சிலர் இணைந்து இந்த அம்பர் தொகையைக் கொள்வனவு செய்யும் போர்வையில் ஹொரணை ஹொரகெட்டிய பிரதேசத்திற்குச் சென்று சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

அகலவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட அம்பர் தொகையின் மொத்த பெறுமதி 03 கோடி ரூபா ஆகும்.

இந்த அம்பர் தொகையானது திருகோணமலை பிரதேசத்தில் உள்ள நபரொருவரிடமிருந்து கிடைத்துள்ளதாக சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஹொரணை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக மேல் மாகாணத்தின் தெற்கு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் மேலும் தெரிவித்தனர்.(05)

# மட்டக்களப்பு களுவாஞ்சிகுடியில் மயானம் ஒன்றிலிருந்து சடலம் மீட்பு



மட்டக்களப்பு,களுவாஞ்சிகுடிபொலிஸ்பிரிவிற்குட்பட்ட மயானம் ஒன்றில் இருந்து ஆணொருவரின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தேற்றாத்தீவு மயானத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ள குறித்த அடையாளம் காணப்படாத சடலத்திற்கு அருகில் சமயவழிபாடுகள் இடம்பெற்றதற்கான தடையங்கள் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் நரபலி பூஜைகள் எதுவும் நடத்தப்பட்டதா என்பது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் இதுவரையில் அடையாளம் காணப்படாத நிலையில் குறித்த பகுதிக்கு வந்த களுவாஞ்சிகுடி பொலிஸார் மற்றும் குற்றத்தடவியல் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

சடலம் சிதைவடைந்த நிலையில் காணப்படுவதால் அடையாளம் காண்பதில் சிக்கல்களை எதிர்கொள்வதாக தெரியவருகின்றது.

குறித்தசடலம்தொடர்பானமேலதிகவிசாரணைகளை களுவாஞ்சிகுடிபொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர். (05)

# வீதியில் பயணிக்கும் பொதுமக்களுடன் நட்பாக பழகி உடைமைகளைத் திருடும் இருவர் கைது

வீதிகளில் பயணிக்கும் பொதுமக்களுடன் நட்பாகப் பழகி அவர்களுக்குப் போதைப்பொருள் கலந்த உணவு வகைகளைக் கொடுத்து பெறுமதியான உடைமைகளைத் திருடும் பெண் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மேல் மாகாணத்தின் தெற்கு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

மேல் மாகாணத்தின் தெற்கு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டி பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரும் அங்கம பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண் ஏற்கனவே திருமணமானவர் எனவும் சந்தேக நபர் இந்த பெண்ணின் காதலன் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து, 15 போதை மாத்திரைகள், திருட்டு சம்பவங்களுக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் ஓட்டோ, தங்க நகைகள் மற்றும் 04 கையடக்கத் தொலைபேசிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் இருவரும் வெலிகடை, கொழும்பு கோட்டை, வாதுவை, இராஜகிரிய மற்றும் வெள்ளவத்தை ஆகிய பிரதேசங்களில் வீதிகளில் பயணிக்கும் பொதுமக்களிடமிருந்து சுமார் 25 லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகளைத் திருடியுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேல் மாகாணத்தின் தெற்கு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# பொகவந்தலாவையில் அதிபருக்கு எதிராகத் தொடரும் ஆர்ப்பாட்டம்

பொகவந்தலாவை டியன்சின் பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றின் அதிபர், ஆசிரியை ஒருவரிடமும் மாணவிகளிடமும் தகாத வார்த்தைகளை பிரயோகித்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பிரதேச பெற்றோர்கள் மற்றும் மாணவிகள், பாடசாலை ஆசிரியர்கள் மூன்றுநாளாகப் பாடசாலை முன்றலில் தொடர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வியாழக்கிழமை இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது வலயக்கல்வி பணிப்பாளர் அவ்விடம் வந்தால் மாத்திரமே தாம் வகுப்பறைக்கு செல்வோம் எனக் கூறிய மாணவிகள் தரையில் அமர்ந்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அவர்களுக்கு ஆதரவாக பெற்றோர்களும் இந்த போராட்டத்தில் கலந்துகொண்டனர். பின்பு அவ்விடத்துக்கு சென்ற வலயக்கல்வி பணிப்பாளரிடம் மாணவிகளும் பெற்றோர்களும் கல்லூரியின் அதிபர் இதற்கு முன்பும் இவ்வாறு நடந்துகொண்ட சம்பவங்கள் இருப்பதால் அவரை இப்பாடசாலையிலிருந்து இடமாற்றம் செய்யும்படி எழுத்து மூலம் கடிதமொன்றை கையளித்திருந்தனர்.

அதற்குவலயக்கல்விபணிப்பாளர்தான்இவ்விடயத்தில்நியாயமானதொரு முடிவை எடுப்பதாக அங்கிருந்தவர்களிடம் உறுதியளித்தார்.

மேலும், மாணவர்களும் பெற்றோர்களும் இந்த பிரச்சினை முடியும் வரை அந்த அதிபர் பாடசாலைக்கு வரக்கூடாது என்ற கோரிக்கையையும் முன்வைத்திருந்தனர். அதையும் வலயக்கல்வி பணிப்பாளர் ஏற்றுக்கொண்டார்.

எனினும், வெள்ளிக்கிழமை கல்லூரி அதிபர் 9 மணிக்கு மேல் பாடசாலைக்கு வருகை தந்ததால் பெற்றோர்கள் மீண்டும் ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கியுள்ளனர்.

இது குறித்து வலயக்கல்வி பணிப்பாளரிடம் தொடர்புகொண்டு கேட்டபோது -

அதிபரை நான் பாடசாலைக்கு போக வேண்டாம் என்று கூறினேன். அதை அவர் மீறியுள்ளார். மேலும் இது குறித்து நான் மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு உடனடியாக அறிவித்தேன். இந்த வாரம் நீண்ட விடுமுறை காலமாகையால் அடுத்த 18ஆம் திகதிக்குப் பிறகு இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் கூறினார்.

எனவே பெற்றோர்களும் மாணவர்களும் இது குறித்து அச்சப்படவேண்டியதில்லை. அவர்களை பொறுமையாக இருக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை அதிபர் தகாத வார்த்தைகளை பிரயோகித்தமைக்கு காரணமாக பாதிக்கப்பட்ட ஆசிரியை மன உளைச்சலுக்குட்பட்டுள்ளதாகவும் இது குறித்து தனது தொழிற்சங்கத்தின் ஊடாக பெண்கள் மற்றும் சிறுவர் முறைப்பாட்டுப் பிரிவுக்கு முறைப்பாடொன்றை அளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(05)

# எட்வர்ட் ஹென்றி பேதிரிஸுக்கு 108 ஆண்டுகளின்பின் மன்னிப்பு

1915 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் திகதி இலங்கை ஆளுநரால் அமைக்கப்பட்ட இராணுவ நீதிமன்றத்தின் நியாயமற்ற விசாரணையின் பின்னர் 1915 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7 ஆம் திகதி அநியாயமாக தூக்கிலிடப்பட்ட தியுனுகே எட்வர்ட் ஹென்றி பேதிரிஸுக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் வியாழக்கிழமை வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலில் இந்த பொது மன்னிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

கலவரங்களில் பங்கேற்று தேச துரோக செயலை செய்ததாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இதுதொடர்பில் பல முறைப்பாடுகள் இருந்தபோதிலும் 1915 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7 ஆம் திகதி அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டார்.

எட்வர்ட் ஹென்றி பேதிரிஸுக்கு நீதி வழங்குவதற்கான விசாரணைக்கு கடந்த 2023 ஆம் ஆண்டு அமைச்சரவையால் அனுமதி வழங்கப்பட்டது.

விசாரணையின் பிரகாரம் அவருக்கு ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. (05)

# ரணில் விக்ரமசிங்கவே மீண்டும் ஜனாதிபதியாக வரவேண்டும்

## அங்கஜனின் ஆசை இது



நாட்டில் பல்வேறு வேலை திட்டங்களை முன்னெடுத்து வரும்ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவே மீண்டும் ஜனாதிபதியாக வர வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனது கட்சி அலுவலகத்தில் நடத்திய ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் -

பல்வேறுபட்ட நெருக்கடியில் இருந்த நாட்டினை மீட்டு தற்போது உள்ள நிலைக்கு கொண்டு வந்தவர் ரணில் விக்ரமசிங்க அவர்களே எனவே அவருக்கே வாக்களிக்க வேண்டும் .

அதேவேளை, தமிழரசை கட்சியை நம்பிருந்த மக்களுக்கு தமிழரசு கட்சியினர் செருப்படி வழங்கியிருக்கிறார்கள்.

அவர்கள் தங்களுக்குள் ஒற்றுமை இல்லாத பல்வேறு குழப்ப நிலைக்கு சென்றுள்ளார்கள். இதனால் ஜனாதிபதியை ஆதரிப்பது தொடர்பிலே பல்வேறு குழப்பம் நிகவுகிறது. - என்றார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

## காலம்....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

பெரமுன தற்போது எங்குள்ளது. பொது ஜன பெரமுனவின்பெரும்பான்மையானவர்களின் தலைவராக ரணில் இருக்கின்றார். சஜித்தின் அருகில் பீரிஸ், டலஸ் உள்ளிட்டவர்கள் இருக்கின்றார்கள். இப்போது இனவாதமும், மதவாதமும் எங்கே உறைந்திருக்கின்றது என்பதை உணர முடிகின்றது அல்லவா?

தொடர்ந்தும்இவ்வாறுஒழித்துமறைத்தும் இனவாதத்தையும், மதவாதத்தையும் முன்னிலைப்படுத்தும் அரசியல் செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது. அனைத்து இன மக்களும் வேறுபாடின்றி ஒன்றிணைந்து ஒரு கொடியின் கீழ் எழுச்சியுறும் காலம் வந்துவிட்டது என்றார்.

## செல்வந்தர்களுக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச நாணய நிதியத்துடன் மீண்டும் பேச்சு நடத்தப்படுமென ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், மக்கள் மீதான வரிச்சுமையை இலகுபடுத்துவதற்கான வழிகளைக் கண்டறிய சர்வதேச நாணய நிதியத்துடன் தமது கட்சி ஏற்கனவே கலந்துரையாடலை ஆரம்பித்துள்ளதாகவும் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துக்கும் இலங்கை ஆளும்தரப்புக்கும் இடையிலான தற்போதைய உடன்படிக்கையில், 'அடிப்படை மாற்றங்கள்' இருக்கவேண்டும், அவை மிகவும் 'மனிதாபிமான முறையில்' மக்கள் மீதான சுமை குறைக்கப்படுவதை உறுதி செய்யவேண்டும் எனவும் அவர் கூறினார்.

செப்டெம்பர் 21 நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ஆரம்பிக்கப்பட்ட சீர்திருத்தங்கள் மீதான வாக்கெடுப்பாகவே பார்க்கப்படுகிறது.

மேலும், ஏற்றுமதி சார்ந்த, அறிவு சார்ந்த பொருளாதாரத்தின் மூலம் பிரச்சினைகளிலிருந்து வெளிவருவது என்பது தனது கொள்கையாகும் எனவும் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

## ஜனாதிபதித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உங்களுக்கு வாக்குரித்து இருந்தால் நீங்கள் கட்டாயமாகஇந்தமுறைஜனாதிபதித்தேர்தலில் சங்கு சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும்.

இந்தத் தேர்தலுக்கும் மற்றைய தேர்தல்களுக்கும் என்ன வித்தியாசம் என்று கேட்பீர்கள். வித்தியாசங்கள் இருக்கின்றன. முதலாவதாக நாங்கள் முதன் முறையாகத்'தமிழ்ப்பேசும்மக்கள்நாம்' என்ற அடிப்படையில் இந்தத் தேர்தலில் கலந்து கொள்கின்றோம். இதுவரை 'இலங்கையர் நாம்' என்று கலந்துகொண்டோம். அது எமக்கு எந்த நன்மைகளையும் தரவில்லை. நாம் இதுவரை வாக்களித்த நபர்கள் நாம் வாக்களித்தோம் என்ற நன்றியறிதல்கூட இல்லாது பதவிக்கு வந்ததும் சிங்கள பௌத்த சிந்தனையில் மூழ்கிவிட்டார்கள். அரசமைப்பில் இருப்பவற்றைக்கூடத் தர மறுத்தார்கள்.

வட கிழக்கு தமிழ்ப்பேசும் மக்கள் வடகிழக்கில் பெரும்பான்மையினர் என்பதை மறந்துஎம்மைவெறும்சிறுபான்மையினராகக் கருதிசிங்களபௌத்தஇனவாட்சியின்கனலை எம்மீது படரவிட்டார்கள். அதனால்த்தான் நாம் இம்முறை 'நாம் யார்' என்ற கேள்விக்கு விடை அளிக்கும் விதத்தில் 'நாம் தமிழர் - நமக்கு நாம்' என்ற சங்குக் குரலை எழுப்பியுள்ளோம்! 'சங்கே முழங்கு' என்று சகல தமிழரையும் சங்குக்கு வாக்களிக்குமாறு கோருகின்றோம்.

இரண்டாவதாக நாம் கட்சி சார்ந்து இந்தத் தேர்தலில் நிற்கவில்லை. கட்சிகள் கடந்து தேர்தலில் நிற்கின்றோம். தமிழ்ப் பேசும் மக்களாக நாம் இந்தத் தேர்தலை எதிர்கொள்கின்றோம். கட்சிகள் வேற்றுமையைவலுப்படுத்துவன. சுயநலத்தை உறுதிப்படுத்துவன. ஆனால் இந்தத் தேர்தல் கட்சிகள் கடந்து தமிழ்ச் சமூகமாகச் சிந்தித்து ஒற்றுமையைமையமாகவைத்துநாம்நடத்தும் தேர்தல். ஆம்! நாம்தான் இந்தத் தேர்தலை நடத்துகின்றோம். ஆளும்தரப்பு இந்த நாட்டின் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க ஜனாதிபதித் தேர்தலை நியமித்தது. நாம் அதனை மாற்றி தமிழ் மக்களை ஒற்றுமைப்படுத்தும் ஒரு தேர்தலாக இதனை மாற்றியுள்ளோம். தமிழ் மக்களின் அல்லல்களை அறிவிக்கும் ஒரு தேர்தலாக மாற்றியுள்ளோம்.

மூன்றாவதாக எமது ஒற்றுமையை உறுதிப்படுத்த இந்தத் தேர்தலைத் தேர்ந்தெடுத்ததற்கு ஒரு காரணம் உண்டு. நாடாளுமன்றத் தேர்தலானது தேர்தல் தொகுதிகளில் நடைபெறும். அங்கு உள்ளூர் மக்களே வாக்களிப்பார்கள்; தேர்ந்தெடுக்கவும்படுவார்கள். மாகாணசபைத் தேர்தலும் அவ்வாறேதான். உள்ளூர் மக்களே தேர்தலில் நின்று தமது உள்ளூர் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பார்கள். உள்ளூராட்சி தேர்தல்களும் அவ்வாறேதான் நடைபெறுவன. ஆனால் ஜனாதிபதித் தேர்தல் மட்டுமே முழு நாட்டையும் மையப்படுத்தி நடைபெறும் தேர்தல். இந்தத் தேர்தலில்த்தான் 'குற்றாலத்தில் இடி இடித்தால் கோயம்புத்தூர் விளக்கணையும்!' இங்கு நாம் தேர்தலில் வாக்களிக்கும் விதம் தெற்கு மக்களைக் கடுப்புக்குள் தள்ளிவிடும். இவ்வாறு நாம் செய்வது இதுவரை காலமும் தெற்கு எம்மை ஏமாற்றி வந்ததற்குப் பதிலடியாகும். எம்மைக் கிள்ளுக்கீரையாக இதுவரை பாவித்த தென்னவரை சிந்திக்க வைக்கும் தேர்தலாக இதனை மாற்றியுள்ளோம்.

நாடு நலம் பெற வேண்டுமென்றால் எம்மையும் சேர்த்துப் பயணிக்கவேண்டும் என்ற செய்தியை நாங்கள் இம்முறை வலுவாக வெளிப்படுத்தியுள்ளோம். கோதாபய சிங்களவரிடம் இருந்து மட்டும் வாக்குகள் பெற்று ஜனாதிபதியாக முடியும் என்று காட்டினார். உயிர்த்த ஞாயிறு அவரின் சிந்தனைக்கு உரம் ஊட்டியது. இம்முறை 'நாமில்லாமல் நீங்களா?' என்ற கேள்வியை தென்னவர் முன் நாம் வைத்துள்ளோம்.

நான்காவதாக இந்தத் தேர்தலில் சுயநலம் களைந்து நாம் யாவரும் ஈடுபட்டுள்ளோம். எமது வேட்பாளர் தேர்தலில் தோற்பார். அது எமக்குத் தெரியும். அவருக்குந் தெரியும். அப்படியிருந்தும் தனது கட்சியுடன் பகைத்துக் கொண்டுஅரியநேத்திரன்எமதுகட்டமைப்பின் அழைப்பை ஏற்று தேர்தலில் நிற்கின்றார். தேர்தலில் தோற்பது மட்டுமல்ல வருங்காலத் தேர்தல்களில்அவர்ஈடுபடமுடியாதசூழலில்கூட தனது சுயநலம் களைந்து தமிழ் மக்களின் அடையாளமாக அவர் பவனி வருகின்றார். நாம்கூட பொது நலம் கருதியே அவருக்காகப் பாடுபடுகின்றோம். அவருக்கு வாக்களித்தால் எமக்கு அமைச்சர் பதவி அல்லது அரச பதவி ஏதும் கிடைக்குமா? கிடைக்காது. தேர்தல் முடிந்ததும் அவர் யாரோ நாம் யாரோ? அப்படியிருந்தும் நாம் யாவரும் சேர்ந்து அவருக்காகப் பாடுபடுகின்றோம். ஏன்? எமது வருங்காலத் தமிழ்ப்பேசும் சந்ததியினரை மனதில் வைத்து நாம் இந்த வேட்பாளருக்காக உழைக்கின்றோம். தமிழினத்திற்காக உழைக்கின்றோம். தமிழ் மொழிக்காக உழைக்கின்றோம். தமிழரின் தாயக பூமி பறிபோகின்றதே என்பதற்காக உழைக்கின்றோம். இந்நாட்டின் தமிழ் மக்கள் பறங்கியர்களின் கதிக்கு ஆளாகக்கூடாது என்பதற்காக உழைக்கின்றோம். ஆகவே தமிழ் மக்கள் ஆகிய நாம் யாவரும் சுயநலம் களைந்து தமிழர் தம் பொது நலம் கருதி இந்தத் தேர்தலில் கட்சி கடந்து கடமையாற்றுகின்றோம்.

நாம் யாவரும் தமிழர் என்ற ரீதியில் எமது வருங்கால வம்சத்தவரை நினைத்து இன்று வேற்றுமை களைந்து ஒற்றுமையாகப் போராடுகின்றோம். ஐந்தாவதாக இவ்வாறு நாம் சேர்ந்து பயணிக்கும்போது எம்முள் இருக்கும் காட்டிக் கொடுக்கும் பகையாளிகளை நாம் அடையாளப்படுத்துகின்றோம். எட்டப்பர்களை அடையாளப்படுத்துகின்றோம். அவர்களைத் தவிர்த்து நாம் எம் பவணியைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றோம். தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிக்கப்படாது என்று மேடையேறி முழங்குவேன் என்றவர் இன்னமும் அந்தக் கூட்டத்தைக் கூட்டவில்லை. அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் தெற்கத்திய கட்சி ஒன்றில் இருந்து அவர் நியமனம் பெறுவதே அவருக்குச் சாலச் சிறந்தது. இன்னுமொருவர் தேர்தலைப் பகிஷ்கரிப்போம்என்றார். தமிழ்வேட்பாளருக்கு வாக்கிடுவதையும் பகிஷ்கரிப்போம் என்றார். அவரும் அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் பற்றி இப்பொழுதிருந்தே சிந்திக்க வேண்டும். இனி தேசியப் பட்டியல் இருக்கைகளுக்கு இடம் கிடையாது போகும்.

கடைசியாகதேர்தலைப்பகிஷ்கரிப்பதற்கும் தமிழ் வேட்பாளருக்கு வாக்களிப்பதற்கும் இடையில் இருக்கும் வித்தியாசத்தை வலியுறுத்த விரும்புகின்றேன். ஒரு மின்சார விசிறிஓடிக்கொண்டிருக்கின்றது. அதில்இருந்து காற்று வந்து கொண்டிருக்கின்றது. ஆனால் அதில் உள்ள கைகள் எமது கண்களுக்குத் தெரிவதில்லை. மிக வேகமாக அவை சுழன்று கொண்டிருக்கின்றன. சுவிட்சைப் போடாத மின்சார விசிறியைப் பாருங்கள். கைகள் கண்ணுக்குத் தெரியும். ஆனால் எந்தவித காற்றோ அதன் வழி வரும் சுகமோ எமக்குக் கிடைக்காது. இரண்டும் ஒரே மாதிரி ஆடாமல் அசையாமல் இருப்பது போல் தெரிவன. ஆனால் ஒன்றால் நன்மை ஏதும் இல்லை. மற்றதால் நன்மை உண்டு. ஆறுதல் உண்டு. சுற்றாருக்கும் சுகம் உண்டு. ஆடாமல் அசையாமல் இருக்கும் பலமற்றிருக்கும்மின்விசிறியேபகிஷ்கரிப்போர். அவர்களால் எவருக்கும் நன்மை இல்லை. விசையாக ஓடும் மின்விசிறியே தமிழ்ப் பொது வேட்பாளர். தோற்றாலும் எமக்கு சுகம் தந்து கொண்டே இருப்பார். தன்னை வருத்தி எம்மை மேம்படுத்துவார்.

இன்னுமொரு வேற்றுமையுண்டு. தமிழ் பொது வேட்பாளருக்கு நாம் வாக்களித்தால் நாட்டின் வாக்காளர் தொகை கூடும். வாக்களித்தோரில் 50 சதவீதம் சக ஒன்று என்று கூறும் போது சிங்கள வேட்பாளர்கள் எடுக்க வேண்டிய வாக்குகள் அதிகமாகிவிடும். பகிஷ்;கரித்தால் வாக்களித்தோர் தொகை குறைந்துவிடும். சிங்கள வேட்பாளர்கள் எடுக்க வேண்டிய வாக்குகளின் தொகையும் குறைந்துவிடுவன. நாம் சிங்கள வேட்பாளர்களுக்கு சுமையைக் கொடுக்கின்றோம். பகிஷ்;கரிப்போர் சுமையை இறக்கி வைக்கப் பாடுபடுகின்றனர். தவறாமல் வரும் 21 வாக்குச் சாவடிகளுக்குச் சென்று சங்கு சின்னத்திற்கு வாக்களித்து எங்கள் சுயநலம் கருதாத வேட்பாளருக்கு உங்கள் அன்பையும் மரியாதையையும் காட்டுங்கள் - என்றார்.

## ரணிலுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கான அரசியல் பிரச்சினைக்குரிய தீர்வுக்கு ஆரம்பம் எவ்வாறானதாக இருக்க முடியும் என்று தொடர்ச்சியாக நாம் கூறிவருவதை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சாதகமாக வெளிப்படுத்தியுள்ளார்

குறிப்பாகதமிழ்மக்களின்பிரதேசங்களை அபிவிருத்தியால் கட்டியெழுப்பவும் வாழும் மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் சிறந்த பொறிமுறைகளை ஜனாதிபதி ரணில் தனது விஞ்ஞாபனத்தில் உள்வாங்கியிருக்கின்றார்.

இதேநேரம் அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடந்த நாட்டுக்கும் தத்தளித்துக்கொண்டிருந்த மக்களுக்கும் மீட்பராக வந்து மீட்சியைக் கொடுத்துள்ளார்

குறிப்பாக மறைபொறுமானத்தில் கிடந்த நாட்டின் பொருளாதாரத்தை கடந்த இரண்டு வருடங்களில் தனது ஆற்றல்மிக்க தலைமைத்துவத்தினூடாக தூக்கி நிறுத்தியிருக்கின்றார். இவ்வாறான நிலையில் அந்த முயற்சிகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச்செல்ல அவருக்கு மேலும்ஒரு சந்தர்ப்பத்தை நாட்டு மக்கள் ஒன்றிணைந்து வழங்க வேண்டும் என கோருகின்றேன்.

இதேநேரம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆற்றலையும் ஆழுமையையும் அருகில் இருந்து பார்த்துவரும் வகையில் இருப்பதை பாதுகாத்துக்கொண்டுநாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு அவரே தலைமை வகிக்கவேண்டும். அவரதுஎரிவாயுசிலிண்டர் சின்னமே உங்கள் ஒவ்வொருவரது தெரிவாகவும் இருக்கவேண்டும். அதனூடாக அந்த வெற்றியில் தமிழ் மக்களும் முழுமையான பங்காளிகளாக இருக்கவேண்டும்என்பதைநான்உங்களிடம் வலியுறுத்துகின்றேன்.

இதேநேரம்ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க மக்களுக்கு கொடுக்கும் வாக்குறுதிகளுக்கும் நான் உங்கள் முன்னால் கூறியவற்றுக்கும் நாமே பொறுப்பாகவும் இருப்போம் அரசியலுக்காகவோஅல்லதுவாக்குக்காகவோ எதையும் நான் பேசுவதில்லை. உங்களதும் நாட்டினதும் எதிர்காலத்தை ஒளிமயமாக்கும் வேலைத் திட்டங்களை அவர் செய்து காட்டியுள்ளார். இதேநேரம் மக்கள் நலன் சார்ந்தே எனது அனைத்து செற்பாடுகள் அமையும். அதனடிப்படையில்தமிழ்மக்களது பிரச்சினைகளுக்குதீர்வுகாணப்படவேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கின்றேன்.

அந்த வகையில் எதிர்வரும் 21 ஆம் திகதியன்றுஉங்கள்ஒவ்வொருவாக்கினூடாக எரிவாயு சிலிண்டர் சின்னத்தை வலுப்படுத்தி அந்தசந்தர்ப்பத்தைரணில்விக்ரமசிங்கவுக்கு கொடுப்பதன் ஊடாகவும் அவரோடு நாம் ஒவ்வொருவரும் சேர்ந்து பயணிப்பதன் ஊடாகவும் எமது மக்கள் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகளில் இருந்து விடுதலைபெற முடியும் என்றார்.

## பரப்புரையில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளாக நேரிடும் என அதிகார சபை எச்சரித்துள்ளது.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் சட்டத்தை நடைமுறைப்படுத்தும்பொறுப்புதமது அதிகார சபைக்குள்ளதெனவும் இதனால் அந்த பொறுப்புகளை தாமதமின்றி நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கூறியுள்ளது.

இலங்கை ஆளும்தரப்பு, ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் சாசனத்தில் கையொப்பமிட்டு அதில் அங்கம் வகிப்பதுடன் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் சிறார்களின் பாதுகாப்பை உறுதி செய்ய கடமைப்பட்டுள்ளதாக அந்த சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அறிவுறுத்தியுள்ளது.

எனவே, சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்களை அனைவரின் பொறுப்பாகக் கருதி தேர்தல் பிரசாரங்களில் சிறுவர்கள் பங்கேற்பதைத் தடுக்குமாறு பெற்றோர், பாதுகாவலர்கள் மற்றும் அனைத்து அரசியல் கட்சிகளையும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை வலியுறுத்தியுள்ளது.

## இடைக்கால....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் இலங்கையின் பரந்துபட்ட அரசியல் அடையாளத்தைப் பிரதிபலிக்கும் விதத்தில் இடைக்கால அமைச்சரவையை ஏற்படுத்தும் என அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கி;ல் உள்ள தமிழ் முஸ்லீம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மலையக நாடாளுமன்ற உறுப்பினர்களின் உதவியுடன் இடைக்கால அமைச்சரவையை ஏற்படு;த்துவதற்கு தனது கட்சி முயலும் என அவர் தெரிவித்துள்ளார்.

நாங்கள் இலங்கை ஆளும்தரப்பை ஏற்படுத்த விரும்புகின்றோம் சிங்கள ஆளும்தரப்பையில்லைஎன்றுதெரிவித்துள்ள அவர், ஆளும்தரப்பு சாரத நாடாளுமன்ற உறுப்பினர்கள்இடம்பெற்றிருக்கும்முதலாவது அமைச்சரவையாக இது காணப்படும் என தெரிவித்துள்ளார்.

225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் வடக்குகிழக்கு மலையகத்தை சேர்ந்த சிறந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர், அவர்கள் இடைக்கால ஆளும்தரப்பை அமைப்பதற்காக தெரிவு செய்யப்படுவார்கள் என்றார்.

## அனுசரணை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சரணை வழங்கிய நாடுகள் செப்டெம்பர் 19 அன்று கூடி ஆராயவுள்ளன. பிரிட்டன் தலைமையில் அமெரிக்கா, கனடா, மாலாவி, வட மெசிடோனியா மற்றும் மொன்டெனிக்ரோ ஆகிய நாடுகள் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத்தொடர் திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமானது. அன்றைய தினம் உலகளாவிய மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க்கின் உரை மற்றும் மியன்மார் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான எழுத்துமூல அறிக்கை, அதன் மீதான விவாதம்என்பவற்றைத்தொடர்ந்துஇலங்கை விவகாரம் குறித்து ஆராயப்பட்டது.

அதன்படி இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் பேரவையில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல்' என்ற தலைப்பிலான 51/1 தீர்மானத்தின்

தொடர்ச்சி 9ம் பக்கம்....

## அனுசரணை....

(எட்டாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளடக்கஅமுலாக்கத்தில்அடையப்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் நாட்டின் தற்போதைய மனித உரிமைகள் நிலைவரம் என்பன தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க் உரையாற்றினார்.

உயர்ஸ்தானிகரின் அறிக்கை தொடர்பில் உறுப்புநாடுகளின் பிரதிநிதிகள் உரையாற்றியதுடன், உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் இயங்கிவரும் மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் அவற்றின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தன. அவ்வறிக்கைகளில் இலங்கை தொடர்பாக ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட 51/1 தீர்மானத்தின் ஊடாக ஐ.நா மனித உரிமைகள்உயர்ஸ்தானிகர்அலுவலகத்துக்கு வழங்கப்பட்டுள்ள ஆணையை மேலும் இருவருடங்களுக்கு நீடிக்கக்கூடியவகையில் அத்தீர்மானத்தைப் புதுப்பிக்குமாறு பேரவையிடம் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட 46/1தீர்மானம், பின்னர் 51/1 ஆக காலநீடிப்புச் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த நிலையில், அத்தீர்மானம் இம்மாதத்துடன் முடிவுக்கு வருகிறது. அதனையடுத்து புதிய தீர்மானமொன்றைக் கொண்டுவருவது பற்றி முன்னர்ஆராயப்பட்டபோதிலும்,இலங்கையில் இது தேர்தல் ஆண்டு என்பதால் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மேலும் ஒன்று அல்லது இரண்டு வருடங்களுக்குக் காலநீடிப்புச் செய்வதற்கான சாத்தியப்பாடு குறித்து பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகள் ஆராய்ந்து வருகின்றன.

செப்டெம்பர் 19 நடக்க இருக்கும் ஆலோசனைக் கூட்டத்தில் மனித உரிமைகள் பேரவையின்உறுப்புநாடுகளின்பிரதிநிதிகளும், சர்வதேசமன்னிப்புச்சபை, மனித உரிமைகள் பேரவை, ஆசிய பேரவை உள்ளிட்ட சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பங்கேற்பர்.

அதேவேளை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 9 ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத்தொடர் முடிவடையவிருக்கும் நிலையில், ஒக்டோபர் முதலாம் வாரத்தில் ஜெனிவா செல்லவுள்ள இலங்கையைச் சேர்ந்த முன்னணி மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், தேவையேற்படும் பட்சத்தில் இலங்கை தொடர்பான 51/1 தீர்மானத்தைக் காலநீடிப்புச் செய்வதற்கு ஆதரவாக வாக்களிக்குமாறுகோரி உறுப்புநாடுகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்துவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## இருண்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் நிலைப்பாட்டை பகிரங்கமாக அறிவிக்கும் வகையில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

நான் தமிழ் அரசுக் கட்சியில் அங்கத்துவம் கொண்டுள்ளேன். கடந்த காலங்களில் அந்தக் கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்பதவியையையும்வகித்துள்ளேன். எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிக்கவேண்டும் என்கின்ற நிலைப்பாட்டில் கட்சி தடுமாறி வருகின்றது. கட்சிக்குள் பல கருத்து முரண்பாடுகளும் உறுப்பினர்களுக்கு இடையே அதிருப்தி நிலையும் அதிகரித்துவரும் நிலையில் அம்பாறை மாவட்ட மக்களுக்கும் இது தொடர்பில் தெளிவின்மையும் சலிப்புத்தன்மையும் உருவாகி வருகின்றது.

அம்பாறை மாவட்டத்து மக்கள் இருண்ட யுகத்துக்குள் உள்ளார்கள். தமிழ் மக்கள் சுயமாக இயங்க முடியாத நிர்வாகத் தலையீடுகள், கல்வி மற்றும் பொருளாதார ரீதியில் அபிவிருத்தி இன்மை காணி மற்றும் எல்லைப் பிரச்சினைகள் வேலையில்லா திண்டாட்டம், கரையோர இல்மனைட் அகழ்வு, சுகாதார வசதியின்மை. என இன்னோரன்ன பல்வேறுபட்ட அடிப்படைப்பிரச்சினைகளுடன் வாழ்ந்து வரும் நிலையில் என்னால் பல விடயங்களை பல்வேறு சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டி தெளிவுபடுத்தியுள்ளேன். ஆனால் அவை தொடர்பில் எவ்வித முன்னற்றகரமான செயற்பாடுகளும் கட்சியால் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை.

அந்த வகையில் எனது அம்பாறை மாவட்ட தமிழ் மக்களுடன் பல்வேறு கட்ட உரையாடல்களைசெய்துள்ளேன். இக்கட்டான நிலவரங்களில் அவர்களோடு தோளோடு தோள் நின்று பல்வேறு பிரச்சினைகளையும் தீர்த்தும் வைத்துள்ளேன். எனினும் எமது பிரதேசத்தில் பல்வேறு பிரச்சினைகளையும் தேவைகளையும் முன்கொண்டு செல்ல நெருக்கடியான சூழ்நிலையில் எமது பிரதேசத்துக்கும் நாட்டிற்கும் சரியான தலைமைத்துவம் இருக்க வேண்டும் என சிந்தித்தேன் - என்றுள்ளது.

## அரசின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமையவேஇடம்பெற்றதுஎன்றுநாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் தெரிவித்தார்.

சர்வதேசநாணயநிதியம்குறிப்பிட்டதைவிட ஆளும்தரப்பு வருமான வரி மூலம் அதிக வருமானத்தைப் பெற்றுள்ளது. எனவே வரி செலுத்துவோருக்கு அதன் பயன் சென்றடையவேண்டும்எனநாம்முன்வைத்த வேலைத்திட்டத்துக்கமையவே தற்போது அதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் அண்மித்து வரும் நிலையில் பல பகுதிகளிலும் வன்முறைகள் இடம்பெற்று வருகின்றன. வன்முறைகள் இடம்பெறாது என்று அநுரகுமார திசாநாயக்க கூறினாலும், அவர்களது வழமையான செயற்பாடுகள் இடம்பெறாமல் இல்லை. தோல்வியை அறிந்துகொண்டுவன்முறைகளில் ஈடுபடுவது ஒழுக்கமான செயல் அல்ல.

வருமான வரி தொடர்பில் நாம் கடந்த வாரம் தெரிவித்திருந்தோம். வருமான வரி மூலம் ஆளும்தரப்பு 100 மில்லியன் ரூபா வருமானத்தை எதிர்பார்த்தது. ஆனால் 144 மில்லியன் ரூபாய் வருமானம் கிடைத்தது. இவ்வாண்டு 200 மில்லியன் ரூபாய் கிடைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே இதன் பயன் வரி செலுத்துபவர்களைச் சென்றடையவேண்டும் என்பதை நாம் வலியுறுத்தியிருந்தோம்.

அதேபோன்று வாகன இறக்குமதிக்கும் இடமளிக்கப்படும்என்றும்தெரிவித்திருந்தோம். நாம் கூறிய விடயங்களுக்கு சமமான வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போதுவரியைக்குறைப்பதற்குநடவடிக்கை எடுத்திருக்கின்றார். அவர் நிச்சயம் இந்தத் தேர்தலில் தோல்வியடைவார். எனவே உங்கள் வாக்குகளை வீணடிக்காதீர்கள் என ஐக்கிய தேசிய கட்சியினரிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

தற்போதுள்ள ஆளும்தரப்பால் அங்கீகரிக்கப்படும் வேலைத்திட்டங்களை அடுத்து தெரிவாகும் ஆளும்தரப்பு அவ்வாறே நடைமுறைப்படுத்தப் போவதில்லை. எனவே நாம் தெளிவான வேலைத்திட்டங்களை முன்வைத்திருக்கின்றோம். அவற்றை நாம் நிச்சயம் நடைமுறைப்படுத்துவோம் என்றார்.

## காஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்திற்கு அபிவிருத்தியும் இல்லை

யாழ்ப்பாணம் முற்றவெளியில் நேற்று முற்பகல் நடைபெற்ற 'ரணிலால் இயலும்' கூட்டத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கூட்டத்தில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டிருந்தனர்.

அங்குஜனாதிபதிமேலும்தெரிவித்ததாவது:

எப்பொழுதும் நான் யாழ்ப்பாணம் வருகிறேன். தேர்தல்களின்போதும்வந்துமக்கள் மத்தியில் உரையாற்றியுள்ளேன். ஏனைய வேட்பாளர்களுக்கு தேர்தல் காலத்தில் மாத்திரம்தான் யாழ்ப்பாணம் நினைவு வருகிறது. ஆனால்எனக்குதேர்தல்காலத்திலும் வந்து உங்களை சந்திக்க முடிகிறது.

1978 முதல் இங்கு வந்துள்ளேன். அந்த சமயம் யாழ் மாநகநகர சபை, யாழ் பிரதேச சபை, சாவகச்சேரி நகர சபை, பருத்தித் துறை நகர சபைக்கும் ஐ.தே.க. போட்டியிட்டது. சாவகச்சேரி பகுதி எனக்கு வழங்கப்பட்டிருந்தது. அன்று தொடக்கம் இங்கு வருகிறேன். இன்று எனக்கு வாக்குக் கோரி வந்துள்ளேன்.

நீங்கள் உணவின்றி இருந்தபோது அதற்கு தீர்வு வழங்கினேன். கேஸ், பெற்றோல், உரம். மருந்து இல்லாதபோது நான் அவற்றைப் பெற்றுக் கொடுத்தேன்.

எந்த எதிர்பார்ப்பும் இன்றி இருந்த உங்களுக்கு எதிர்பார்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளேன். எதிர்காலத்தையும் உருவாக்கினேன். தற்பொழுது பொருளாதாரத்தைமீட்டிருக்கிறேன். மக்களுக்கு வாழும் சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் அது 2019 போன்ற நிலைமையல்ல. அந்த நிலைமைக்கு நாம் செல்ல வேண்டும். இன்றுள்ள நிலைமை மாறலாம். வீழ்ச்சியடையலாம். அது குறித்து ஐஎம்எப் எச்சரிக்கை விடுத்துள்ளது. தற்போதைய நிலைமை நன்றாக உள்ளது. ஆனால் இந்தப் பாதையில் செல்லாவிட்டால் மீண்டும்சரிவுஏற்படலாம்எனஎச்சரித்துள்ளது. இதே பாதையில் தொடர்ந்து செல்வதற்காகவே உங்களிடம் வாக்கு கோரி வந்துள்ளேன்.

அநுரவுக்கும் சஜித்திற்கும் இன்றுள்ள முறைமையை மாற்றி தமது முறைப்படி செல்ல வேண்டும். வாழ்க்கைச் சுமையை குறைப்பதாகவும் வரியை குறைப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர். அவ்வாறு செய்தால் ஐஎம்.எப் உதவி கிடைக்காது. அந்த நிலையில் வீழ்ச்சி ஏற்படும். நான் ஐ.எம்.எப். உடன் கலந்துரையாடி ரூபாயை பலப்படுத்தினேன். 370 ரூபாயாக இருந்த டொலரின் பெறுமதி இன்று 300 ரூபாயாக குறைந்துள்ளது. பொருட்களின் விலைகள் குறைந்துள்ளன. இன்னும் விலைகள் குறைய வேண்டும். மக்களுக்கு இன்னும் நிவாரணம் வழங்க வேண்டும். எமக்கு கடன் வழங்க வேண்டாம் எனவும் பணம் அச்சிடக் கூடாது எனவும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டன.

இந்த நிலையில் நிதி திரட்டவே வரி அதிகரிக்கப்பட்டது. வரி அதிகரித்ததால்தான் வருமானம் அதிகரித்து ரூபாயின் பெறுமதி உயர்ந்தது. அதனால் ஓரளவு நிவாரணம் வழங்க முடிந்தது. வாழ்க்கைச் செலவை குறைப்பதுதான் எனது பிரதான நோக்கமாகும். மொத்தத் தேசிய உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். அஸ்வெசுமவை அறிமுகம் செய்து நிவாரணம் வழங்கினோம். உர மானியம் அளித்தோம்.

அரச மற்றும் தனியார் துறை சம்பளத்தை அதிகரித்துள்ளோம். உழைக்கும்போது அறவிடும் வரியை குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். 5 இலட்சம் மட்டத்தில் இருந்து வரி செலுத்தும் மட்டத்தை 7.5 இலட்சமாக அதிகரித்துள்ளோம். அந்நியச் செலாவணி கையிருப்பு அதிகரித்துள்ளது. அதனால் வாகன இறக்குமதிக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலை தொடர்ந்தால் 3,4 வருடங்களின் பின்னர் வீழ்ச்சி ஏற்படாது.

அநுரவும் சஜித்தும் வரியை குறைப்பதாக கூறுகின்றனர். நானும் வரியை குறைக்க விரும்புகிறேன். தற்போதைய நிலையில் அவ்வாறு செய்தால் இப்போதைய முன்னேற்றம் பாதிக்கப்படும். 2022 மே - ஜூன் மாதம் போன்ற நிலை ஏற்படும். அதனாலே மக்கள் முன்பாக வந்து உண்மை நிலையைக் கூறுகிறேன்.

ஐ.எம்.எப்பிடம் சென்று பேசப்போவதாக இருவேட்பாளர்களும் கூறுகின்றனர். அதனை அவர்களுக்கு முன்னரே செய்திருக்கலாம். பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு முதலில் வாழ்க்கைச் சுமையைக் குறைக்க வேண்டும். பொருளாதார நெருக்கடிக்கான மூலகாரணியை ஆராய வேண்டும். அதற்குத் தீர்வு காண வேண்டும்.

ஏற்றுமதி வருமானத்தை அதிகரித்து ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும். சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்நாம் போன்ற நிலைக்கு முன்னேற வேண்டும்.

முதலீட்டாளர்கள் முதலீடுகளை ஆரம்பிக்கும்வரை இளைஞர் யுவதிகளுக்கு சில வாய்ப்புகளை வழங்க வேண்டும். அடுத்த வருடம் ஒரு இலட்சம் தொழில் வாய்ப்புகளை வழங்க இருக்கிறோம். விவசாய நவீன மயமாக்கலையும்மேற்கொள்ள இருக்கிறோம். உலகசனத்தொகைஇரண்டுபில்லியன்களால் உயர இருக்கிறது. அதில் சிறு குழுவுக்காவது உணவு வழங்கும் நிலையை உருவாக்க வேண்டும். பழமையான விவசாய முறைகள் அன்றி நவீன விவசாய முறைகளின் ஊடாக உற்பத்தி அதிகரிக்கும், வருமானம் உயரும்.

அநுரவையும் சஜித்தையும் பார்த்தால் முதலீட்டாளர்கள்திரும்பிச்சென்றுவிடுவார்கள். முதலில் நாட்டை முன்னேற்றுவோம். அத்தோடு வடக்கில் உள்ள எஞ்சிய பிரதான பிரச்சினைகளையும் தீர்க்க வேண்டும். வடக்கு விடயங்களை அரசியல் பிரச்சினைக்கு மாத்திரம்மட்டுப்படுத்தக்கூடாது. அபிவிருத்தியும் அவசியமானது. இன்றேல் ஏனையமாகாணங்கள்முன்னோக்கிச்சென்று விடும். மாகாண சபைகளை பலப்படுத்தி வழங்க வேண்டிய அதிகாரங்களை வழங்குவதாக எனது விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளேன். மத்திய அரசுக்கு ஒத்துழைப்பதற்கு 9 மாகாண சிற்றரசுகள் தேவை. அந்தந்த பிரதேச அபிவிருத்திகளை அவை பெறுப்பேற்று மேற்கொள்ள வேண்டும். தேசிய காணி ஆணைக்குழுவை ஸ்தாபிக்க வேண்டும். பல விடயங்களை மேற்கொள்ள உடன்பட்டுளோம். உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்க இருக்கிறோம். நவாஸ்குழுவின் பரிந்துரைக்கு அமைவாக காணமல் போனோர் தொடர்பான பிரச்சினையை 5 வருடங்களில் நிறைவு செய்ய இருக்கிறோம்.

தமிழர் பிரச்சினையை தீர்ப்பதோடு தமிழ் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் தீர்க்க இருக்கிறோம். பெண்களை வலுவூட்டும் சட்டத்தை நிறைவேற்றியுள்ளோம். குடும்ப வன்முறைகளை தடுக்க நடவடிக்கை எடுத்துள்ளேன். குடிபோதையில் வந்து மனைவியை அச்சுறுத்தினால் அந்தக் கணவரை பொலிஸில் நிறுத்தமுடியும். அரசியல் பிரச்சினைக்கு மாத்திரம் அன்றி அபிவிருத்தியும் மேற்கொள்ள இருக்கிறோம். காங்கேசன்துறையில் முதலாவது முதலீட்டு வலயம் உருவாக்கப்படும். இரண்டாம் கட்டம் பரந்தனிலும் மூன்றாம் கட்டம் மாங்குளத்திலும் ஆரம்பிக்கப்படும். பாரிய அபிவிருத்தியை ஏற்படுத்த இருக்கிறோம். சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கான ஹோட்டல்வசதிகள் இங்கு போதாது. அவற்றை ஆரம்பிக்க வேண்டும். படகுச்சவாரிகளை ஆரம்பிக்க வேண்டும். புலிகள் காலத்தில் படகோட்டியவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வருமான வழியாகஇருக்கும்.

இங்கு டிஜிட்டல் வலயமொன்றையும் உருவாக்க இருக்கிறோம். யுத்தத்துடன் தொடர்புடையவர்களை இணைத்துக் கொண்டு நவீன விவசாயத்தை முன்னெடுக்க இருக்கிறோம். அவர்களுக்கும் எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். எமது கடற்றொழிலாளர்களையும் பாதுகாக்க வேண்டும்.

பூகரில் சூரிய சக்தி மின்உற்பத்தி நிலையம் ஆரம்பிக்க இருக்கிறோம். அரசியல் பிரச்சினைக்கு தீர்வும் அபிவிருத்தியும் சமமாக முன்னெடுக்கப்பட வேண்டும். அநுர குமார முன்னர் மாகாண சபை முறைக்கு எதிராக போரடினார். தெற்கில் பாரிய யுத்தம் செய்தனர். அதற்கு எதிரானவர்களிடம் உறுதி மொழி பெற்றனர். தமிழ் மக்களை அச்சுறுத்தியதற்கு எதிராக நாம் யாழ்ப்பாணத்தில் அநுரவை விமர்சித்திருந்தேன். அதற்கு அவர் எனக்கு ஏசியுள்ளார். நான் ஏதாவது தவறாகச் சொன்னேனா? சுமந்திரன் தான் அவரை பாதுகாக்கிறார்.

நான் பொருளாதார பிரச்சினை குறித்து கேள்வி எழுப்பினால் அவரால் பதில் வழங்க முடியாது. அவர்என்னைவிவாதத்திற்குஅழைத் தார். ஆனால் இதுவரை அதற்கான அழைப்பு கிடைக்கவில்லை. நான் கேட்கும் கேள்விக ளுக்கு அவரால் பதில் வழங்க முடியாது. சஜித்தைப் பற்றி சொல்வதற்கு எதுவுமில்லை. அவரை பற்றி எனக்கு நன்கு தெரியும். இந்த இரு வேட்பாளர்களினாலும் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வராது- - என்றார்

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# புதிய ஆளும்தரப்புடன் பேச்சில் ஈடுபடத் தயார்

## சர்வதேச நாணய நிதியம்



இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்று மக்கள் விருப்பத்துடன் புதிய அரசாங்கம் அமையப்பெற்ற பின்னர் தனது திட்டங்கள் குறித்து விவாதிப்பதற்குத் தயார் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணயநிதியத்தின் திட்டங்கள் இலங்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை கண்டுள்ளன எனினும் இலங்கை தனது பொருளாதார நெருக்;கடியிலிருந்து முழுமையாக மீள்வதற்காக இந்த முன்னேற்றத்தை பாதுகாப்பது அவசியம் என சர்வதேச நாணயநிதியத்தின் தகவல் தொடர்புதுறை இயக்குநர் ஜூலி கோசெக் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் எதிர்கட்சிகள் தெரிவித்துள்ளபடி ஈஎவ்எவ் திட்டம் தொடர்பான கடன்பேண்தகு தன்மை மதிப்பீட்டை மீள்பரிசீலனை செய்ய அல்லது மீளாய்வு செய்ய முடியுமா என்ற கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையின் எதிர்கால தேர்தலை பொறுத்தவரை அதனை இலங்கை மக்களே தீர்மானிக்கவேண்டும் எனத்தெரிவித்துள்ள அவர் சர்வதேச நாணயநிதியத்தின் பார்வையிலிருந்து பார்க்கும் போது இந்தத் திட்டம் குறிப்பிடத்தக்க விடயங்களை சாதித்துள்ளதாகக் கருதுகின்றோம் எனத் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த நாடு நெருக்கடியிலிருந்து முழுமையாக மீள்வதற்கு இந்தத் திட்டத்தை பாதுகாப்பது அவசியம் என அவர் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது போல தேர்தலின் பின்னர் அரசாங்கத்துடன் மூன்றாவது மறுஆய்வு குறித்து பேசுவோம், என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் தெரிவை அடிப்படையான முடிவின் பின்னர் நாங்கள் அதனுடன் இணைந்து செல்ல தயாராக உள்ளோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.(05)







# லொறி – மோட்டார் சைக்கிள் மோதி விபத்து : ஒருவர் காயம்

நீர்கொழும்பு பிரதேசத்தில் உள்ள தேவாலயம் ஒன்றிற்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்து வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

வீதியில் பயணித்த லொறி ஒன்றின் சக்கரமொன்று திடீரென கழன்று வீழ்ந்ததால் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த லொறி எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது, மோட்டார் சைக்கிளின் செலுத்துனர் படுகாய மடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.(05)

# ஜனாதிபதி வேட்பாளரின் ஆதரவாளர் தாக்கியதில் ஒருவருக்குக் காயம்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர் ஒருவரின் ஆதரவாளரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

சம்பவத்தன்று, சந்தேக நபரான ஆதரவாளர் தனது ஜனாதிபதி வேட்பாளருக்கு வாக்களிக்குமாறு காயமடைந்த நபருக்கு கூறியுள்ளார்.

இதன்போது, இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் எல்லை மீறியதில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து, காயமடைந்தவர் பலப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்




4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir



# கந்தளாய் சோழீசுவரம் சிவன் ஆலய உற்சவத்தில் குகதாசன் எம்.பி.



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலைமாவட்டத்தின்கந்தளாயில்பிரசித்தி பெற்றசோழீசுவரம்சிவன்ஆலயத்தில்திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.குகதாசன் கலந்து கொண்டார் .

திருகோணமலை மாவட்டத்தில் சதுர்வேதி மங்களபுரம் என புராதன பெயரைக் கொண்ட கந்தளாய் என தற்போது அழைக்கப்படும் ஊரில் சோழ மன்னர்கள் ஆட்சியில் சோழீசுவரம் எனும் பெயருடன் சிவன் அருள்பாலிக்கும் சிவாலயம் கட்டுவிக்கப்பட்டு முறைப்படி

கும்பாபிஷேகம் நடத்தப்பட்டு இப்போது ஊர்மக்களால் பன்னிரெண்டுநாள்களை கொண்ட வருடாந்த மகோற்சவம் நடத்தப்பட்டு வருகிறது .

இதன் ஓர் அங்கமாக ஒன்பதாம் நாள் திருவிழாவாக சப்பரத் திருவிழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது .

இப்புதிய சப்பரத்திற்கான நிதியை பன்முகபடுத்தப்பட்ட நிதியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் ச.குகதாசன் ஒதிக்கியமை குறிப்பிடத்தக்கது. (05)

# மாணவியின் ஆபாச புகைப்படங்களை பயன்படுத்தி கப்பம் கோரிய காதலன் தொடர்பில் விசாரணை

மாணவியின் ஆபாச புகைப்படங்களை பயன்படுத்தி கப்பம் கோரியதாக கூறப்படும் காதலன் தொடர்பில் மிஹிந்தலை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

12 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் மாணவி ஒருவர் சந்தேக நபரான காதலனுடன் பல மாத காலமாக காதல் உறவில் ஈடுபட்டு வந்துள்ள நிலையில் சந்தேக நபர் இந்த மாணவியுடனான காதல் உறவை திடீரென முறித்து கொண்டுள்ளார்.

இந்நிலையில், சந்தேக நபரான காதலன் இந்த மாணவியின் ஆபாச புகைப்படங்களை பயன்படுத்தி மாணவியை அச்சுறுத்தி 34,500 ரூபா பணத்தை பெற்றுள்ளார்.

இதனையடுத்து, சந்தேக நபரான காதலன் தனக்கு மேலும் 30,000 ரூபா பணம் தேவைப்படுவதாக இந்த மாணவியிடம் கூறியுள்ளார்.

பின்னர், இந்த மாணவி இது தொடர்பில் தனது பெற்றோரிடம் தெரிவித்துள்ளதோடு மிஹிந்தலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

இதனையடுத்து, சந்தேக நபரான காதலன் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மிஹிந்தலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றன. (05)

# ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க முதல்முறையாக விசேட தேவையுடையோருக்கு அடையாள அட்டை





எதிர்வரும்21ஆம்திகதிநடைபெறவுள்ளஇலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பதற்காக முதன்முறையாக விசேட தேவையுடையவர்களுக்கான விசேட அடையாள அட்டையை தேர்தல் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன் முதற்கட்டமாக ஐந்து மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அதில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலக பிரிவுகளிலும் உள்ள 526 விசேட தேவையுடையவர்களுக்கு இந்த அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளன.

முதல் தடவையாக வெள்ளிக்கிழமை மண்முனை வடக்கு, காத்தான்குடி, ஏறாவூர் நகரம் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்த விசேட தேவையுடைய வர்களுக்கு விசேட வாக்களிப்பு அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டன.

இந்த அடையாள அட்டை பத்து வருடங்களுக்கு செல்லுபடியாகும் எனக் கூறப்படுகிறது.

மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் எச்.எம் சுபியான் தலைமையில் நடைபெற்ற விசேட தேவையுடையோருக்கான அடையாள அட்டைகள் விநியோகிக்கும்நிகழ்வில்மட்டக்களப்புமாவட்டஅரசாங்க அதிபரும் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியுமான ஜெ.முரளிதரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷினி மற்றும் சமூக மாவட்ட சமூக சேவை அதிகாரி உட்பட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

விசேட தேவையுடையவர்கள் இந்த அடையாள அட்டையினூடாக சிரமமின்றி வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்க முடியும் என மாவட்ட அரசாங்க அதிபர் இங்கு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

(05)

# தமிழ் பேசும் மக்களுக்கு சிறந்த தலைவர் சஜித்

## யஹியாகான் இடித்துரைப்பு

(எம்.எப்.றிபாஸ்)

தமிழ்,முஸ்லிம்,சிங்கள,சமூகம் இந்நாட்டில் ஒற்றுமையாக வாழ வேண்டுமாகவிருந்தால் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆட்சிபீடம் ஏற்றவேண்டும். அப்போதுதான் இந்த நாடும் நாட்டு மக்களும் சுபீட்சம் பெற்றவர்களாக மாற முடியும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி பொருளாளரும், உயர் பீட உறுப்பினருமான ஏ. சீ. யஹியாகான் தெரிவித்தார்.

சாய்ந்தமருது பிரதேசத்தில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து திறந்து வைக்கப்பட்ட காரியாலயத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்தும் அவர் தனது உரையில் -

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப்ஹக்கீமின் கரத்தை பலப்படுத்துவதன் மூலம் சஜித் பிரேமதாஸ நிச்சயம் வெற்றி பெறுவார்.

மக்களின் ஜனநாயக ஆணையை மீறி நாட்டையும், நாட்டின் வளங்களையும் கொள்ளையடித்த கூட்டத்தை எதிர்வரும் தேர்தலுடன் முடிவுக்கு கொண்டு வர வேண்டும். இவர்களது பொய் பிரசாரங்களுக்கு நாம் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இந்தத் தேர்தலிலே வெற்றி பெறுவது உறுதிசெய்யப்பட்ட விடயமாகும். இந்நிலையில் ஸ்ரீ லங்கா மு. காங்கிரஸ் கட்சியை நேசிக்கின்ற நாம் இப்பிரதேசத்தில் ஒன்றாக இணைந்து முழுமையான பங்களிப்புக்களையும் செய்ய வேண்டும்.

எல்லா வகையான வேலைத் திட்டங்களிலும் கொள்ளையடிப்பதையும், சுரண்டுவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தவர்களால் தான் இந்த நாடு பெரும் பஞ்சத்தை அனுபவித்தது. இதனால் நாட்டு மக்கள் அனுபவித்த துன்ப துயரங்கள் ஏராளம். இப்படிப்பட்டவர்களை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வருவது இந்த நாட்டு மக்களுக்கு செய்யும் துரோகமாகும்.

மக்களின் ஜனநாயக ஆணையை மீறி அல்லது உதாசீனப்படுத்தி சர்வதேசத்தின் உதவியோடு ஊழல் மோசடி செய்து வெற்றி பெற முயற்சித்தால் அவ்வாறானவர்கள் மீண்டும் ஒரு மக்கள் புரட்சியை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும். இதனால் அவர்கள் நாட்டை விட்டு ஓடுமளவுக்கு நிலமை மாறிவிடும்.

போராளிகளாகிய நாம் வீடு வீடாகச் சென்று சஜித் பிரேமதாஸவின் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு மக்களை ஒன்று திரட்டுவதோடு ஊழல் நிறைந்த ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்து கொள்ளை கும்பலை வீட்டுக்கு அனுப்ப வேண்டும்.

இத்தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க படுதோல்வி அடைவதுடன், ஜனநாயகத்தையும் ஜனநாயக ஆட்சியையும் மதிக்கின்ற சஜித் பிரேமதாஸ அமோக வெற்றி பெற்று இந்த நாட்டின் ஜனாதிபதியாக வருவார் என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது எனவும் கூறினார்.(05)

# குழியில் விழுந்த யானை மஹியங்கனையில் சாவு

மஹியங்கனை ரஜமஹா விகாரையின் எசல பெரஹராவிற்கு அழைத்து வரப்பட்ட பதுலு முத்தியங்கன ரஜமஹா விகாரையைச் சேர்ந்த 'மது' என்ற யானை ஒன்று பழைய மலசலகூட குழியில் விழுந்து உயிரிழந்துள்ளதாக ஹசலக்க பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

30 வயதையுடைய யானையே உயிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

எசல பெரஹராவிற்கு கலந்து கொண்ட யானைகளுக்கு உணவளிப்பதற்காக லொறி ஒன்றில் யானைகளை ஏற்றிச் சென்ற போது ஹசலக்க, செவெல பொக்குவ பிரதேசத்தில் வைத்து இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உள்ளூர்வாசிகள், பொலிஸார், வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் மற்றும் பலர் இணைந்து மலசலகூட குழியில் விழுந்த 'மது'வை பேக்ஹோ மூலம் மீட்க பெரும் முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் இரவு ஏழு மணியளவில் இந்த யானை உயிரிழந்ததாக பொலிஸார்தெரிவித்தனர்.

மேலும், வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் உயிரிழந்த யானையின் உடலில் பிரேத பரிசோதனை மேற்கொள்ள உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக, ஹசலக்க பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் திஸாநாயக்கவின் பணிப்புரையின் பேரில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.(05)

# திருடர்களின் கத்திகுத்துக்தால் தொடருந்து பணியாளர் காயம்

இரத்மலானை புகையிர நிலையத்திற்குள் அத்துமீறி நுழைந்த இரண்டு திருடர்களின் கத்திகுத்துக்கு இலக்காகி ரயில்வே பாதுகாப்பு பிரிவின் உப பரிசோதகர் ஒருவர் காயமடைந்துள்ளதாக கல்கிஸ்ஸை பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

இரத்மலானை புகையிரத நிலையத்திற்குள் அத்துமீறி நுழைந்த திருடர்கள் இருவர் ரயில் பெட்டிகளின் உதிரிபாகங்களை திருடிச் செல்ல முயன்ற போது அதனை அவதானித்த ரயில்வே பாதுகாப்பு பிரிவின் உப பரிசோதகர் ஒருவர் திருடர்களை பிடிக்க முயன்றுள்ளார்.

இதன்போது, ரயில்வே பாதுகாப்பு பிரிவின் உப பரிசோதகர் ஒருவர் திருடனின் கால்களை இறுக்கமாக பிடித்து கொண்டுள்ளார்.

பின்னர், அந்த திருடர்கள் இருவரும் ரயில்வே பாதுகாப்பு பிரிவின் உப பரிசோதகரை கத்தியால் குத்தி காயப்படுத்தி அங்கிருந்து தப்பிச் செல்ல முயன்ற போது ரயில்வே பாதுகாப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு கல்கிஸ்ஸை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, காயமடைந்த ரயில்வே பாதுகாப்பு பிரிவின் உப பரிசோதகர் சிகிச்சைக்காக கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# பகிர்ந்துகொள்வதற்கான அரசை அல்லாது பகிர்ந்துகொடுக்கும் அரசையே அமைப்போம்

## சாய்ந்தமருதில் அநுர தெரிவிப்பு



(எம்.வை. அமீர்)

சாதாரண மக்களுக்கு ஒரு சைக்கிளையோ அல்லது சிறிய வாகனத்தியோ இறக்குமதி செய்ய முடியவில்லை. ஆனால் மரிக்கார் போன்றவர்கள் கார் போமிட் கேட்கின்றனர். நாங்கள் இவ்வாறான அரசை அமைக்கப்போவதில்லை. பகிர்ந்து கொள்வதற்கான அரசை அல்லது பகிர்ந்து கொடுப்பதற்கான அரசையே நாங்கள் அமைப்போம் என்று தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸ்ஸாநாயக்க தெரிவித்தார்.

'நாடுஅநுரவோடு' என்றதலைப்பிலானமக்கள்கூட்டம் சாய்ந்தமருதுமருதூர்சதுக்கத்தில்தேசியமக்கள்சக்தியின் சாய்ந்தமருது அமைப்பாளர் ஆதம்பாவா தலைமையில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. திரண்டிருந்த மக்கள் வெள்ளத்தின் முன் உரையாற்றியபோதே அநுரகுமார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் வீழ்ச்சிக்கு காரணமானவர்களை துரத்தியடித்து நாடாளுமன்றத்தை சுத்திகரிக்கவேண்டிய தேவையுள்ளது. எதிர்காலஎங்களது ஆட்சியில்குறைவான அங்கத்தினர்களைக்கொண்ட அமைச்சரவை ஒன்றை அமைப்போம். அங்கு இராஜாங்க அமைச்சர்கள் இருக்க மாட்டார்கள். சமமான பிரதி அமைச்சர்களே இருப்பார்கள். அங்கு நாட்டுக்கு தேவையான அவசியமான தீர்மானங்களை மட்டுமே எடுப்போம். கடந்த காலத்தில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டபோது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எரிபொருளுக்காக ஒரு லட்சம் வழங்கினார்கள். நாங்கள்தான் அவைகளை எடுக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் இல்லாமல் ஆக்கப்படும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வாகன போமிட் இல்லாமலாக்கப்படும்.

25 பேர்களைக் கொண்ட அமைச்சரவை.

இராஜாங்க அமைச்சர்கள் இல்லை.

பிரதி அமைச்சர்கள் 25 பேர்.

அமைச்சர்களுக்கு பின்னால் ஏழு எட்டு வாகனங்கள் செல்ல முடியாது.

அமைச்சர்களுக்குஅரசாங்கத்தால்வீடுவழங்கப்படாது.

அமைச்சர்களுக்கான மின்சாரம், நீர் மற்றும் தொலைபேசி கட்டணங்கள் வழங்கப்பட மாட்டாது.

ஜனாதிபதிக்கான ஓய்வூதியமும் இல்லை.

முன்னாள்ஜனாதிபதிகளைபராமரிக்கும்செலவுகளும் இல்லை.

நாடு பூராயும் உள்ள ஜனாதிபதி மாளிகைகளை இல்லாமளாக்குவோம்.

நாடாளுமன்றஉறுப்பினர்மற்றும்அமைச்சர்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருந்தால் மட்டுமே பாதுகாப்பு வழங்கப்படும்.

உறுப்பினர்களின் கார் கதவுகளை திறந்து விடவோ அவர்களது மனைவிமாருக்கு குடை பிடிக்கவோ பாதுகாப்புஉத்தியோகத்தர்களைபயன்படுத்த மாட்டோம். பாதுகாப்பு படையினர் நாட்டின் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டவே பயன்படுத்தப்படுவர்.

இவ்வாறானதொரு நாட்டையே நாங்கள் உருவாக்க முயல்கிறோம். என்றும் தெரிவித்தார். நாங்கள் நாட்டில் சரியான சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவோம்.

கொள்ளையிடப்பட்ட நாட்டின் சொத்துக்களை மீளக் கொண்டு வருவோம்.

மத்தியவங்கியில் கொள்ளையிடப்பட்டதை நாங்கள் கொண்டுவருவோம். என்றும் தெரிவித்தார்.

இந்த பிரதேசத்தில் ஹிஸ்புல்லாஹ் வருகை தந்து தேசிய மக்கள் சக்தி தொடர்பில் மோசமான உண்மையில்லாதகருத்துக்களைகூறியுள்ளார். அதாவது முஸ்லிம்கள் கொண்டாடும் பெருநாள்களில் ஒன்றை குறைத்து விடுவோம் என்றும் ஐங்கால தொழுகைக்கு இடையூறு விளைவிப்போம் என்று கூறிச் சென்றுள்ளார். அதேபோன்று திஸ்ஸ அத்தநாயக்க கூறியுள்ளார் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பெரஹெராவை நடத்த தடைவிதிப்போம் என்றும் கூறுகிறார்கள். இவ்வாறான எண்ணங்கள் எங்களிடம் இல்லை. எங்களைமதரீதியாக பிழையாக காண்பித்து இப்போது ஏற்பட்டுள்ள மக்கள் செல்வாக்கை குறைக்க எடுக்கும் முயற்சிகளாகும்.

மதங்கள் தொடர்பில் அரசியல் மேடைகளில் பேசவேண்டிய தேவையில்லை. சமயங்களுக்கும் அரசியல் சாயம் பூச எத்தனிக்கின்றார்கள். இவர்கள் தொடர்பில் நாங்கள் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும்.

இலங்கை பலமத மொழி கலாசாரத்தை பின்பற்றுகின்ற மக்களைக் கொண்ட நாடு. இந்த மக்களை நாட்டின் முன்னேற்றத்துக்காக இணைத்துக்கொண்டு பயணிப்பதன் ஊடாகவே முன்னேற்றப்பாதைக்கு நாட்டை இட்டுச்செல்ல முடியும் என்றும் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி, இலங்கையில் வாழும் அத்தனை மக்களினதும் மொழி, மத மற்றும் கலாசார விழுமியங்களை பாதுகாக்கும் கடப்பாட்டுடனேயே தனது பயணத்தை ஆரம்பிக்கும் என்றும் தெரிவித்தார்.

தெற்கில் எங்களுடம் மக்கள் கூட்டிணைந்துள்ளனர்அதேபோன்றுகிழக்குமக்களும் எங்களுடன் ஒன்றிணைய வேண்டும். தெற்கு, கிழக்கு மற்றும் வடக்கு மக்களின் ஆதரவுடனான அரசாங்கம் ஒன்றை அமைப்பதே தேசிய மக்கள் சக்தியின் நிலைப்பாடாகும்.

இந்த பிரதேசங்களுக்கு சஜித் வருவது ஹக்கீமை தோளில் வைத்துக்கொண்டு; ரணில் வருவது அதாவுல்லாஹ்வை தூக்கிக்கொண்டு; ஆனால் நாங்கள் வந்திருப்பது மக்களை நம்பிக்கொண்டு என்றும் தெரிவித்தார்.

கடந்த கால அரசியல் வாதிகள் இனவாதத்தை மூலதனமாகக் கொண்டு ஆட்சியை கைப்பற்றினர். கொரோனா காலத்தின்போது அந்த நோயினால் இறந்த முஸ்லிம் ஜனாசக்களை எரித்தார்கள் அப்போதிருந்த மெட்டு அணியினர்தான் இதனை செய்தனர். அந்த கொடூரத்தை செய்தவர்கள் எங்களது அணியில் இல்லை என்றும் தெரிவித்தார். அப்படியானால் நீங்கள் யாரை தேர்ந்தெடுப்பது என்று உங்களுக்கு புரியும். உங்களது தெரிவு தேசிய மக்கள் சக்தியாகவே இருக்கும் என்று நினைக்கிறேன்.

இன்றைய சூழலில் அரசியல் ஒரு சூதுபோல் இருக்கின்றது இவர்கள் அங்கு செல்கிறார்கள் இங்கு செல்கிறார்கள் இவைகள் எல்லாம் மக்களின் நலன்களுக்காகவா? இல்லை அவர்களது பாக்கெட்டுக்களை நிரப்புவதற்காகவே. இவ்வாறான நிலைகளை மாற்ற வேண்டும். நாட்டில் புதிய அரசியல் கலாச்சாரம் ஒன்றை உருவாக்கவேண்டும் இதற்காக நாங்கள் ஒன்றுபடுவோம் என்றும் தெரிவித்தார். (05)



# நவீன மாற்றத்துக்கு அடையாளமாக முசலி பிரதேச சபை கருதப்படுமாம்

## ரிஷாத் கூறுகிறார்

அரசியலில் நவீன மாற்றத்துக்கான அடையாளமாக முசலி பிரதேச சபை கருதப்படுமென மன்னார், அளக்கட்டு பகுதியில் நடந்த கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.



வியாழக்கிழமை மன்னார், அளக்கட்டு – பொற்கேணியில், பெண்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். சஜித் பிரேமதாசவின் பாரியார் ஜலனி பிரேமதாச கௌரவ அதிதியாகக் கலந்துகொண்ட இக்கூட்டத்தில், மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் மேலும் கூறியதாவது –

தாய்மார்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட இக்கூட்டத்தில் பேசுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இக்கூட்டத்தை ஏற்பாடு செய்த சகலருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். நாட்டுஅரசியலில்நவீன மாற்றம் ஏற்படப்போகிறது. இந்த மாற்றத்துக்கான அடையாளமாக முசலி பிரதேச சபை கருதப்படும். அந்தளவுக்கு இப்பிரதேச தாய்மார்கள்சஜித்பிரேமதாஸவின் வெற்றிக்காக உழைக்கின்றனர். எனவே, இம்மாதம் 22இல் ஏற்படவுள்ள ஆட்சி மாற்றத்துக்கு அத்திபாரமிட்ட பெருமை, இந்தப் பிரதேசத்து தாய்மார்களுக்கே கிடைக்கும்.

ஏழைத்தாய்மார்களின்பசியை உணர்ந்தவர் சஜித் பிரேமதாஸ. இவரது தந்தைதான் வறுமையை ஒழிப்பதற்கு 'ஜனசவிய' திட்டத்தை நடைமுறைப்படுத்தியவர். தான் ஆட்சிக்கு வந்தால் ஏழைத் தாய்மார்களுக்கு மாதாந்தம் இருபதாயிரம் ரூபாவை வழங்குவதாக உறுதியளித்துள்ளார். இதுபோன்ற நல்ல நிகழ்ச்சித் திட்டங்கள் சஜித் பிரேமதாஸவிடம் உள்ளன.

இப்போதுசிலர்,எங்களிலிருந்து பிரிந்து ரணிலை ஆதரிக்கச் சென்றுவிட்டனர். முன்னாள் உறுப்பினர்கள் என்ற கௌரவம் இவர்களுக்குஎப்படிக்கிடைத்தது. எமது தாய்மார்கள் வழங்கிய வாக்குகளால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு சென்றதாலே, இந்தகௌரவங்கள்இவர்களுக்கு கிடைத்தன. பணத்துக்காக விலைபோனதால், முசலி சமூகத்தின் கௌரவத்தை மலினப்படுத்திவிட்டனர்.

ஆகையால், விலைபோவோர்களுடன் நாங்கள் இல்லை என்பதை இவர்களுக்குஉணர்த்த வேண்டும். எனவே டெலிபோன் சின்னத்துக்குவாக்களித்து, சஜித் பிரேமதாஸவின் வெற்றியில் பங்காளர்களாவோம். – என்றார். (05)





# 2019இல் இனவாதம் தலைதூக்கியபோது நாட்டை விட்டு ஓடியவர்கள் எங்கே?

## இம்ரான் மஹரூப் கேள்வி





(எச் எம் ஹலால்தீன் )

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் முகமாக திருகோணாமலை மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்இம்ரான்மஹரூப்கிண்ணியா பெரியாற்றுமுனை, சின்னம் பிள்ளைச்சேனை, கரடிப்பூவல் ஆறாம்,ஏழாம் வட்டார மக்களை தெளிவுபடுத்தும் துண்டுபிரசுராங்கங்கள விநியோகிக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம் பெற்றது.

அத்துடன் ஊடகங்களுக்கு அவர் கருத்தும் தெரிவித்தார்.

மக்கள் நல்லதொரு மாற்றத்தை எதிர்பார்க்கிறார்கள் இந்தமாற்றம்மக்களுக்குநன்மையளிக்கும்தருணத்தில் ஜனாணிபதி தேர்தல் வந்துள்ளது.

2019 இல் இனவாதம் தலை தூக்கிய போது நாட்டைவிட்டுஓடியவர்கள்எங்கே?

எந்தமேடைகளைபார்த்தாலும் சஜீத் பிரேமதாஸவை பற்றி விமர்சிக்கிறார்கள். நாட்டில் வரிசையைஇல்லாமால்ஆக்கியதாக ரணில் சொல்கிறார்.

ஆனால் மக்களுடைய பொருளாதார தன்மை ஸ்திரமடையவில்லை .ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சியில் மஹிந்தவின் குடும்பம் மீண்டும் நாட்டில் தாண்டவமாடுகிறது.

ரணில் விக்ரமசிங்க நாட்டை பாரமெடுத்த பின்னர் தான் நாமல் தேர்தலில் போட்டியிடுகிறார் ரணிலுடன் இருப்பவர்களே ராஜபக்ஷர்களின் கடைக்கு சென்றவர்களே .

சஜீத் பிரேமதாஸ இனமத பேதமற்ற பல உதவிகளை செய்துள்ளார் இன வாதமற்ற பிரதேச வாதமற்ற தலைவர்.

எனவேஇவருக்குவாக்குகளை அளிக்க வேண்டும் என்பதே எல்லோரதும் வேண்டுகோளாக காணப்படுகிறது. - என்றார்.(05)








# முதலைக்குடாவில் சஜித்தின் தேர்தல் பிரச்சார அலுவலகம் திறந்து வைப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

ஜனாதிபதி வேட்பாளரும் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைவருமானசஜித்பிரேமதாஸவின் தேர்தல்பிரச்சாரஅலுவலகம் கொக்கட்டிச்சோலை முதலைக்குடாவில் வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது .

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவரும்முன்னாள்பிரதிஅமைச்சருமான சோ. கணேசமூர்த்தி அலுவலகத்தை நாடா வெட்டி திறந்து வைத்தார் .

ஐக்கியமக்கள்சக்திகட்சியின்பட்டிப்பளைபிரதேசதலைவரும் முன்னாள் தவிசாளரும் அதிபருமான சிவ.அகிலேஸ்வரன் தலைமையில் திறப்பு விழா இடம் பெற்றது.

விழாவில்ஐக்கியமக்கள்சக்திகட்சியின்மட்டக்களப்புமாவட்ட பிரசார செயலாளர் வெ.சுதாகரன் உள்ளிட்ட ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் துண்டு பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டது.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.09.2024இல் வெளியிடப்பெற்றது